விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 19 சனிக்கிழமை (02.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 134


SATS-TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தமிழர் பிரச்சினை குறித்து ஆராய்வு

## தாக்குதல்களை நிறுத்தவும் வலியுறுத்தல்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஆராயப் பட்டுள்ளது. இப்பிரச்சினை தொடர்பாக ஐ.நா வுக்கான அமெரிக்கத் தூதுவர் சூசன் ரைஸ் உரை யாற்றியுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் புலிகளின் 3 படகுகள் தாக்கியழிப்பு

### கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று அதி காலை விடுதலைப்புலிகளின் மூன்று படகு களை கடற் படையினர் தாக்கி அழித்திருப்ப தாகவும் அதில் 23 விடுதலைப் புலிகள் கொல் லப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தாக்கியழிக்கப்பட்ட படகுகளில் இரண்டு படகுகள் தற்கொலைப் படகுகள் எனவும் மற் றையது தாக்குதல் படகு எனவும் ஊடக மத் திய நிலையம் கூறியுள்ளது.

இதேவேளை முள்ளிவாய்க்கால் கடற் பரப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் கடல் வழியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ இணையத்தளம் முடக்கம் புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத்தினரின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்றுக் காலை முதல் முடக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளத்தினை திறக்கும் போது, பொதுமக்களின் இழப்புக்களை விபரிக்கும் புகைப்படங்கள் மாத்திரமே காட் டப்படுகின்றன.

அரசாங்கத்தினால் கடந்த 15 மணித்தி யாலங்களில் 5 ஆயிரத்து 600 பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அதில் செய்தி வெளியிடப்பட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித் தாக்குதல்களில் 172 பொதுமக்கள் பலி

(கொழும்பு)


முல்லைத்தீவிலுள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் கடல் வழியாகத் தரையிறங்கும் நோக்கில் படையினர் நடத்திய வலிந்த தாக் குதலிலும் ஆட்லறி மற்றும் பல்குழல் வெடிக ணைத் தாக்குதல்களிலும் 172 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், 289 பேர் காயமடைந்துள்ளனர் என செய்திகள் தெரிவித்தன.

படையினரின் கடல்வழி தரையிறக்க முயற்சிக்கு எதிராக கடற்புலிகளும் விடுத லைப் புலிகளும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## செய்ம்மதிப் படங்கள்

வன்னியில் மோதல் நடக்கும் பிர தேசத்தில் இருக்கும் பொது மக்களை பாதுகாப்பதற்காக இலங்கை அர சால் பாதுகாப்பு வலயமாக அறிவிக் கப்பட்டிருக்கும் பகுதியில் எறிக ணைத் தாக்குதல்களும் குண்டுத் தாக்குதல்களும் நடந்திருப்பதைக் காட்டக் கூடிய செய்ம்மதி தொலைக் காட்சிப் படங்கள் வெளியாகியுள் ளன.


இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் (12ஆம் பக்கம் பார்க்க)




## யசூசி அகாஷி வவுனியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள இலங் கைக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி நேற்று வவுனியா மனிக்பாம் பகு திக்கு விஜயம் செய்து அங்கு தங்கவைக்கப் பட்டுள்ள இடம் பெயர்ந்த மக்களின் நிலை மைகளை நேரில் கண்டறிந்ததோடு இடம் பெயர்ந்த மக்களுடன் (12ஆம் பக்கம் பார்க்க)



## வெளிநாட்டு இராஜதந்திரிகளின் கரிசனை அரசியல் நோக்கங்களைக் கொண்டது

### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பான வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவரது அண்மைய இலங்கை விஜ யம் நேரத்தை வீணடிக்கும் செயல் எனவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் வெளிவிவ கார அமைச்சர்களின் இலங்கை விஜயம் தொடர்பில் இங்கிலாந்திலிருந்து வெளிவ ரும் டெய்லி டெலிகிராப் பத்திரிகைக்கு அளித்த விசேட (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேறுமாறு ஜனாதிபதி அறிவிப்பு



### விமான மூலம் துண்டுப் பிரசுரம் விநியோகம்

(கொழும்பு)

விடுவிக்கப்படாத பகுதியில் எஞ்சியிருக்கும் மக்களை வெளியேறு மாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வான் மார்க்கமாக மக்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக நீங்கள் தொடர்ச்சியான இன்னல்களுக்கு (12ஆம் பக்கம் பார்க்க)



வன்னிப் பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள் ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

# க.பொ.த. உயர்தரம் 3A,2AB பெற்ற வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களை இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய கௌரவிப்பு விழா நிகழ்வு



இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் தலைமை உரை ஆற்றுவதையும், இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் க.சகாதேவன் வரவேற்புரை ஆற்றுவதையும், கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆசியுரை வழங்குவதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் சிறப்புரையாற்றுவதையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, ஓய்வு பெற்ற செயற்பாட்டு முகாமையாளர் கே.உலகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் காணலாம்.



வலம்புரியின் ஆலோசகர் க.திருமாலழகன், ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் தெய்வேந்திரராஜா, கரவெட்டி ஞானாசாரியார் பாடசாலை மாணவி ஆகியோர் கருத்துரை வழங்குவதையும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வெ.சின்னத்தம்பி விரிவுரை நிகழ்த்துவதையும், இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திருமதி எஸ்.பிரபாகரன் நன்றியுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.



நிகழ்வில் கலந்து கொண்டவர்கள்.

# பாதிக்கப்பட்ட மக்களைக் காக்க அனைவரும் முன்வர வேண்டும்

## செஞ்சிலுவைச்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இடம் பெயர்ந்த,காயமடைந்த மற்றும் உடல்நலக்குறைவான பல்லாயிரக்கணக் கான பொது மக்களைப் பாதுகாக்க அனைத்து தரப்பினரும் உணவு மற்றும் மருந்து பொருட் களை அனுப்பிவைக்க வேண்டும் என சர்வ தேச செஞ்சிலுவைச்சங்கத்தின் ஆசிய நாடு களுக்கான திட்ட துணைத் தலைவர் மோனிகா செனரலி தெரிவித்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு வலயத்தில் அபாய கரமான சூழலை எதிர்நோக்கியுள்ளதாக சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் சுமார் 12 ஆயிரத்து 400 பேர் காயமடைந்த மற்றும் அவர்களின் உறவினர்களை புதுமாத் தளனில் இருந்து கப்பல் மூலம் சர்வதேச செஞ் சிலுவைச்சங்கம் அழைத்து வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 29ஆம் திகதி உலக உணவுத் திட்டம் வழங்கிய 30 தொன் உணவுப் பொருட் களையும் கப்பல் மூலம் ஏற்றிச் சென்றதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளது.

மேலும் ஒரு இலட்சம் பேர் வரை அரச கட் டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வந்துள்ளனர். அவர்களுக்கான அத்தியாவசிய சேவை களை வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங் கம் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (ச-5)

# உணவுப் பொருள்களைப்பெற முண்டியடிக்கும் மக்கள்

## வவுனியாவில் பரிதாபம்

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த மக் கள் நீண்ட நாட்களாக போதியளவு உண வின்றி பசியுடன் இருப்பதால் உணவுப்பொருட் களைப் பெற்றுக்கொள்வதற்கு முண்டியடிப் பதால் சிலர் காயங்களுக்கு உள்ளாவதாக தெரியவருகிறது.

முகாம்களிலுள்ளவர்களுக்கான உணவுப் பொருட்களையோ அல்லது தண்ணீர் போத் தல்களையோ விநியோகிக்க வாகனம் ஒன்று சென்றால் அதன் பின்னால் ஓடும் மக்கள் அவற்றை பெற்றுக் கொள்வதற்கு முண்டி யடிப்பதாகவும் இந்த நெரிசலில் சிக்குண்டு சிலர் காயமடைந்திருப்பதாகவும் அரச சார் பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் கூறி னார்.

இவ்வாறான நெரிசலில் சிக்குண்டு அண் மையில் கைக்குழந்தையொன்று உடல் சித றிப் பலியானதாகவும் அவர் தெரிவித்தார். பசி யால் மக்கள் மிருகமாகி விட்டார்கள் என அரச சார்பற்ற பணியாளர் மிகவும் கவ லையுடன் கூறினார். அதே நேரம் உணவுப் பொருட் கள் மற்றும் தண்ணீர் போத்தல் களை விநியோகிப்பவர்களும் சரியான முறை யில் அதனைச் செய்வதில்லையென்ற குற் றச்சாட்டும் எழுகிறது. குறிப்பாக தண்ணீர் போத்தல்களை வீசி யெறியும் போது அதனை ஏந்துவதற்காக மக்கள் ஒருவருடன் ஒருவர் மோதுவதாக தெரிய வருகிறது.

இவ்வாறு முண்டியடித்து உணவுப் பொருட்களை பெறுவதால் பட்டினியால் பலவீனமடைந்திருக்கும் முதியவர்களுக்கோ அல்லது சிறுவர்களுக்கோ உணவுப் பொருட் கள் சென்றடைவதில்லையெனவும் கூறப்படு கிறது. இதேவேளை உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறாத மக்களைத் தேடியறிந்து தாம் உணவுப் பொருட்களை வழங்கி வரு வதாக அரச சார்பற்ற நிறுவனமொன்று எம் மிடம் கூறியது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## கலிலியோவின் கண்டுபிடிப்பு

பைசா நகரத்தில் ஒரு பல்கலைக்கழகம் இருந்தது. அங்கு ஓர் இளைஞர் படித்துக் கொண்டிருந்தார்.

அந்த நகரத்தில் இருந்த மாதா கோயில் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தார். ஏதோ யோசனையில் கோயிலில் நின்று அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

மேலே ஒரு தொங்கு விளக்கு காற்றில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அதை நன்றாக கவனித்துப் பார்த்தார். அது அசையும் போது அங்கு இங்கும் போய் வரும் தூரம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வந்தது.

ஆனால் அதில் ஒரு அதிசயத்தை அவர் கவனித்தார். ஊசலாடிய அந்த விளக்கு சென்ற தூரம் குறைந்ததே தவிர அசைவின் எண்ணிக்கை குறையவில்லை. அந்த காலகட்டத்தில் கடிகாரங்கள் நடைமுறைக்கு வரவில்லை.

அதனால் அவர் தம்முடைய நாடித் துடிப்பை வைத்துக் கொண்டு அசையும் பொருளின் விசாலம் மாறினாலும் கால அளவு மாறவில்லை என்பதை அறிஞர்கள் முன் நிரூபித்துக் காட்டினார்.

அவர் யார் தெரியுமா?

அவர் தான் கலிலியோ கலிலி. விஞ்ஞான மேதை.

அந்த விளக்கு எவ்வளவோ காலமாகத்தான் ஆடிக் கொண்டிருந்தது. எத்தனையோ பேர் இதற்கு முன்னாடியும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை. இவருக்குத்தான் அதிலுள்ள நுட்பம் புரிந்தது. அதுதான் நமக்கும் விஞ்ஞானிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

கலிலியோ கண்டுபிடித்து நிரூபித்துக் காட்டிய அந்த விதியை அடிப்படையாக வைத்துத்தான் மாறாத கால அளவில் ஊசலாடும் ஊஞ்சல் அமையப் பெற்ற கடிகாரங்களை உருவாக்கினார்கள்.

இன்றைக்கு உலகம் முழுவதிலும் நடைமுறையிலுள்ள பெண்டுலம் கடிகாரங்களுக்கெல்லாம் ஆதாரம் கலிலியோ கண்டு பிடித்த அந்தத் தத்துவம் தான்.

அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கடிகாரம் இன்று எவ்வளவோ மாற்றங்களைக் கண்டிருக்கிறது.

சிலரால் அலாரம் வைக்கமால் காலையில் எழுந்திருக்கவே முடியாது. கடிகாரம் தான் எழுப்பிவிட வேண்டியிருக்கிறது.

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் பேசிக் கொள்வதில்லை. ஏதோ மனஸ்தாபம் வாய் விட்டுத்தான் பேசிக் கொள்வதில்லையே தவிர எழுத்து மூலமாக பேசிக் கொள்வார்கள்.

"காபி ரெடியா?" என்று இவர் ஒரு பேப்பரில் எழுதிக் காட்டுவார்.

"இதோ போட்டுக் கொண்டு வருகிறேன்" என்று அவர் எழுதிக் காட்டுவார்.

"எனது சேட் எங்கே?" என்று இவர் எழுதிக் காட்டுவார்.

"உங்கள் பெட்டியின் மேல் வைத்திருக்கிறேன்" என்று அவர் எழுதிக் காட்டுவார்.

இப்படியே அந்தக் குடும்பத்தில் தகவல் பரிமாற்றம் நடந்தது. ஒருநாள் அவர் அவசரமாக வெளியூர் போக வேண்டியிருந்தது. "காலை 5 மணிக்கு ரயில். 4 மணிக்கு எழுப்பிவிடு" என்று எழுதி மனைவியிடம் காட்டினார்.

அவரும் "சரி" என்று எழுதி இவரிடம் காட்டினார்.

ஆனால் என்ன ஆயிற்று தெரியுமா?

மறுநாள் 7 மணி ஆகிவிட்டது. அப்பொழுது தான் அவர் முழித்துக் கொண்டார். என்ன செய்வது 5 மணிக்கே ரயில் போயிருக்கும்.

உடனே கோபமாக ஒரு பேப்பரை எடுத்து, "பேசாமல் ஒரு கடிகாரத்தில் அலாரம் வைத்திருக்கலாம். உன்னை நம்பி எழுப்பி விடச் சொன்னேனே. என்ன ஆயிற்று உனக்கு?" என்று எழுதி மனைவியின் முகத்துக்கு நேராக நீட்டினார்.

பதிலுக்கு அவரும் ஒரு பேப்பர் துண்டில் "உங்கள் தலையணைக்கு அடியில் பார்க்கவும்" என்று எழுதி நீட்டினார்.

அவர் உடனே அவசரமாக தலையணையை எடுத்துப் பார்த்தார்.

அதில் "மணி நான்காகி விட்டது. எழுந்திருக்கவும்" என்று எழுதியிருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி முடிபுகள்

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஆண்கள் பிரிவுக்கான மெய்வல்லுநர் போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்கு பற்றத் தகுதியுடையவர்கள் என உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் வே. வல்லிபுரம் அறிவித்துள்ளார். முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆண்கள்.**

**11 வயதுப்பிரிவு**

**75 - மீற்றர்**

சி. மதுசாந் - தேவரையாளி இந்துக்கல்லூரி, க. கயூபன் - தொண்டைமானாறு மகாவித்தியாலயம், அ. டிக்ஷன் - திக்கம் சித்தி விநாயகர்.

**100 - மீற்றர்**

சி. மதுசாந் - தேவரையாளி இந்துக் கல்லூரி, அ. அனுஷாந் - புற்றளை மகா வித்தியாலயம்.

**உயரம் பாய்தல்**

வி. விதுர்ஷன் - வல்வை. ம.க, க. கயூபன் - தொண்டைமானாறு மகா வித்தியாலயம், அ. டிக்ஷன் - திக்கம் சித்தி விநாயகர்.

**நீளம் பாய்தல்**

ர. அனுஷாந்த் - தொண்டைமானாறு மகா வித்தியாலயம், த. ஜனீஸ்வரன் - கலட்டி றோ.க.

**13 வயதுப்பிரிவு**

**100 - மீற்றர்**

க. சிவகிருஷன் - கரணவாய் ம.வி., றொ. விதுர்சன் - கலட்டி றோ.க.

**200 - மீற்றர்**

றொ. விதுர்சன் - கலட்டி. றோ.க., க. சிவகிருஷன் - கரணவாய் ம.வி.

**உயரம் பாய்தல்**

சி. ஞானகீர்த்தனன் - கொற்றாவத்தை அ.மி.த.க.

**நீளம் பாய்தல்**

றொ. விதுர்சன் - கலட்டி றோ.க., சா. றெக்சன் - புற்றளை மகா வித்தியாலயம்.

**15 வயதுப்பிரிவு**

**100- மீற்றர்**

ர. நிரோஜன் - உடுப்பிட்டி அ.மி.த, து. சங்கீர்த்தனன் - உடுப்பிட்டி அ.மி.த, ர. செந்தூரன் - தொண்டைமானாறு மகாவித்தியாலயம்.

**200 - மீற்றர்**

ர. நிரோஜன் - உடுப்பிட்டி அ.மி.த, சூ. கஸ்ரின் - ஹாட்லி கல்லூரி, க. சிந்துஷன் - அல்வாய் லங்கா.

**400 - மீற்றர்**

க. சிந்துஷன் - அல்வாய் லங்கா, ர. பத்மரூபன் - புலோலி அ.மி.த. க., சி. மாதுஜன் - கொற்றாவத்தை அ.மி.த.க.

**உயரம் பாய்தல்**

யோ. தனுசன் - தொண்டைமானாறு மகா வித்தியாலயம், சி. மாதுஜன் - கொற்றாவத்தை அ.மி.த.க., ஜோ. கொலின்ஸ் யூலியஸ் - ஹாட்லிக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

சி. மாதுஷன் - கொற்றாவத்தை அ.மி.த.க., அ. நிரேகன் - புற்றளை மகா வித்தியாலயம், க. சிந்துஷன் - அல்வாய் லங்கா.

**குண்டெறிதல்**

ஜே. பிறசுவீன் - உடுப்பிட்டி அ.மி.த, க. ஆரூரன் - ஹாட்லிக் கல் லூரி, பா. மதுசுதன் - சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

**தட்டெறிதல்**

க. ஆரூரன் - ஹாட்லிக் கல்லூரி, ஜெ. பிறசுவீன் - உடுப்பிட்டி அ.மி.த.

**ஈட்டி எறிதல்**

பா. மதுசுதன் - சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், பா. தவசீவன் - கரணவாய் ம.வி., ஜெ. பிறசுவீன் - உடுப்பிட்டி அ.மி.த.

**17 வயதுப்பிரிவு**

**100 - மீற்றர்**

தி. தயாபரன் - கம்பர்மலை அ.த.க, செ. அனுராஜ் - ஹாட்லிக் கல்லூரி, த. தனேஸ் - நெல்லியடி ம.ம.வி.

**200 - மீற்றர்**

த. தனேஸ் - நெல்லியடி ம.ம. வி, தி. தயாபரன் - கம்பர்மலை அ. த.க., பா. மாதுயன் - தேவரையாளி இந்துக் கல்லூரி.

**400 - மீற்றர்**

த. தனேஸ் - நெல்லியடி ம.ம.வி, ச. ஜங்கரன் - கரணவாய் ம.வி., தி. தயாபரன் - கம்பர்மலை அ.த.க.

**800 மீற்றர்**

ச. ஜங்கரன் - கரணவாய் ம.வி., சி. ஜசிந்தன் - ஹாட்லிக் கல்லூரி, சி. நிசாகரன் - நெல்லியடி ம.ம.வி.

**1500 மீற்றர்**

ச. ஜங்கரன் - கரணவாய் ம.வி., சா. பிரசாத் - ஹாட்லிக் கல்லூரி, சி. நிசாகரன் - நெல்லியடி ம.ம.வி.

**உயரம் பாய்தல்**

யோ. பிரசாத் - நெல்லியடி ம.ம. வி., பு. கிருஷ்ணானந்தன் - நெல்லியடி ம.ம.வி.

**நீளம் பாய்தல்**

தி. கோபிராஜ் - உடுப்பிட்டி அ.மி.த, செ. அனுராஜ் - ஹாட்லிக் கல்லூரி, க. ரஜீவன் - பொலிகண்டி இ.த.க.

**முப்பாய்தல்**

தி. கோபிராஜ் - உடுப்பிட்டி அ.மி.த., சோ. தனஞ்யன் - ஹாட்லிக் கல்லூரி, கி. செந்தூரன் - உடுப்பிட்டி அ.மி.த.

**குண்டு எறிதல்**

இ. விமலேந்திரா- உடுப்பிட்டி அ.மி.த., சோ. தனஞ்யன் - ஹாட்லிக் கல்லூரி, கு. கோபிரஞ்சன் - உடுப்பிட்டி அ.மி.த.,

**தட்டு எறிதல்**

அ. அரிகரன் - நெல்லியடி ம.ம.வி. கி. கோபிரஞ்சன் - உடுப்பிட்டி அ.மி.த, வ. பிரதிகரன் - ஹாட்லிக் கல்லூரி.

**ஈட்டி எறிதல்**

யோ. காண்டீபன் - தும்பளை சிவப்பிரகாசம், ர. பத்மநிரோஜன் - புலோலி மெ.மி.த.க.

**19 வயதுப்பிரிவு**

**100 மீற்றர்**

ம. குமணன் - விக்னேஸ்வராக் கல்லூரி, ஆ. நாகராஜ் - ஞானசாரியார் கல்லூரி, ஜெ. செந்தில் குமரன் - சிதம்பராக் கல்லூரி.

**200 - மீற்றர்**

ஆ. நாகராஜ் - ஞானசாரியார் கல்லூரி, சே. ஜோன்கெனடி, ஈ. அருள்ராஜ் - ஹாட்லிக் கல்லூரி.

**400 - மீற்றர்**

ச. பிரசாத் - சிதம்பராக் கல்லூரி, சி. சுசீதர் - விக்னேஸ்வராக் கல்லூரி, ஆ. நாகராஜ் - ஞானசாரியார் கல்லூரி.

**800 - மீற்றர்**

ச. பிரசாத் - சிதம்பராக் கல்லூரி, சி. சுசீதர் - விக்னேஸ்வராக் கல்லூரி, ஆ. கரிகாலன் - ஹாட்லிக் கல்லூரி.

**1,500 மீற்றர்**

ச. பிரசாத் - சிதம்பராக் கல்லூரி, த. ரவிராஜ் - ஹாட்லிக் கல்லூரி.

**5,000 மீற்றர்**

த. ரவிராஜ் - ஹாட்லிக் கல்லூரி, த. மிரேஸ் - சிதம்பராக் கல்லூரி.

**உயரம் பாய்தல்**

த. நரேந்திரன் - வல்வை சிவகுரு வித்தியாலயம், ச. வசீஹரன் - சிதம்பராக் கல்லூரி.

**முப்பாய்ச்சல்**

க. சிந்துயன் - விக்னேஸ்வராக் கல்லூரி, சோ. விஷ்ணுசந்தர் - ஹாட்லிக் கல்லூரி, சி. சுசீதர் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**குண்டு எறிதல்**

வ. ஹரிகரன் - ஹாட்லிக் கல்லூரி, தி. மனோராஜ் - ஹாட்லிக் கல்லூரி.

**தட்டு எறிதல்**

வ. ஹரிகரன் - ஹாட்லிக் கல்லூரி, டே. டொமினிக் டிசோக் - கலட்டி றோ. க.த.க, ப. சஞ்சீவன் - விக்னேஸ்வராக் கல்லூரி.

**ஈட்டி எறிதல்**

ச. வசீஹரன் - சிதம்பராக் கல்லூரி, தி. மனோராஜ் - ஹாட்லிக் கல்லூரி, வ. ஹரிகரன் - ஹாட்லிக் கல்லூரி.

**400 மீற்றர் தடைதாண்டல்**

இ. தர்சன் - தும்பளை சிவப்பிரகாசம், ப. சஞ்சீவன் - விக்னேஸ்வராக் கல்லூரி, ஜெ. செந்தில் குமரன் - சிதம்பராக் கல்லூரி. (ஓ-19)

(தொடரும்)

# இராசி பலன்



*02.05.2009*
*(சித்திரை 19, சனிக்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 4.27 மணிவரை*
*ஆயிலியம் பின்னிரவு 2.16 மணிவரை*
*இராகுகாலம் 8.57-10.27 மணிவரை*
*சுபநேரம் 2.57-4.27 மணிவரை*
*அட்டமி, நவமி.*

| | |
|---|---|
| மேடம் | உஷ்ண நிலை, நல்ல முயற்சி, போசன சுகம், பிரயாண நன்மை. |
| இடபம் | வாக்குமேன்மை, நற்கீர்த்தி, இஷ்ட சித்தி, தனலாபம். |
| மிதுனம் | மனோ சங்கடம், வேலைச்சுமை, தனவிரயம், போசன சுகக் குறைவு. |
| கடகம் | வெகுமானம், நல்ல வரவேற்பு, முயற்சி பலிதம், விருந்துபசாரம். |
| சிங்கம் | பிறருக்கு உதவுதல், பிரயாணம், சிந்தனை மிகுதி, சுபசெலவு. |
| கன்னி | சுவாரஸ்யம், காரிய அனுகூலம், போசன சுகம், பொருள் சேர்க்கை. |
| துலாம் | பெரியோர் சந்திப்பு, தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், போசன சுகம். |
| விருச்சிகம் | திடீர் பயணம், அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம், புதிய திட்டமிடல். |
| தனுசு | மனக்கவலை, பொருள் விரயம், முயற்சி தாமதம், மரியாதைக் குறைவு. |
| மகரம் | தேக நலன், குடும்ப மகிழ்ச்சி, பிரயாணம், தனலாபம். |
| கும்பம் | காரிய அனுகூலம், கௌரவமான நிலை, ஆரோக்கியம், தனலாபம். |
| மீனம் | அஜீரணக் கோளாறு, தனவிரயம், முயற்சி தாமதம், புத்திரரால் கவலை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 70 |
| தக்காளி | 200 | 220 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 65 | 80 |
| கோவா | 30 | 35 | 40 |
| கரட் | 40 | 50 | 60 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 45 | 55 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 30-40 | 30-35 | 45 |
| பெரிய வெங்காயம் | 140 | 120-140 | -- |
| பாகற்காய் | 90 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | 90 |
| பயிற்றங்காய் | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | -- |
| போஞ்சி | - | - | - |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 32 |


பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அண்மையில் வல்வெட்டித்துறை றோ.க.த.க பாடசாலையில் இடம்பெற்ற தேர்ச்சி மட்ட கற்பித்தலில் பெற்றோரின் பங்களிப்பு எனும் நிகழ்வில் வடக்கு மாகாணப் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர் ந.அனந்தராஜா உரையாற்றுவதையும், தரம் 2 மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாட்டில் ஆர்வத்துடன் பங்கேற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர்கள் மற்றும் வடமராட்சி வலய முதன்மை ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## ஆங்கில திரைப்படக் காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்.பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு "TAMING OF THE SHREW" எனும் ஆங்கிலத் திரைப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி நூலக சிறுவர் பகுதியில் தனித்துவமான திரைப்படங்கள் சிறுவர்களுக்கு காண்பித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-51)

## அபிஷேகப் பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியிலிருந்து அருளப்பட்டு வருகின்ற விபூதி, சந்தனம், குங்குமம் ஆகிய அபிஷேகப் பொருட்கள் எதிர்வரும் 5 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிமுதல் வழங்கப்பட வுள்ளதாக சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஓ)

## அரச அதிபர் கிண்ணம் -2009

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அரச சேவையில் பொன்விழாவை அண்மித்துக் கொண்டிருப்பதை முன்னிட்டு அவர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடாத்தும் "அரச அதிபர் கிண்ணம்- 2009" இன் துடுப்பாட்ட ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு புங்கங்குளம் சந்தி, அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத் துடுப்பாட்ட நிகழ்வை அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஓ-6)

## வீதி மீள் புனரமைப்பு

இராசவீதியின் நீர்வேலி மாசிவன் சந்திக்கும் நவக்கிரிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி மீளப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ் வீதி கடந்த ஜனவரி மாதத்தில் பள்ளங்களுக்குக் கற்கள் நிரவப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டதெனினும் தற்போது மீளவும் உழுது, வீதி அமைக்கப்பட்டு வருகிறது. (ஓ)

## "பயமில்லையே" இறுவட்டு அறிமுகவிழா

(குருநகர்)

அமலமரித் தியாகிகள் கலைத் தொடர்பகத்தால் மன்னாரில் வெளியிடப்பட்ட "பயமில்லையே" திருப்பாடல் தொகுப்பு இறுவட்டின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் அருட்பணி எவ்.எல்.என்.சந்திரபோஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்பணி பி.ஜெ.ஜெபரட்ணம் கலந்து சிறப்பிப்பதுடன் இசைத் தொகுப்பினையும் வெளியிட்டு வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் பி.எவ்.சின்னத்துரை. உளவளத் துணையாளர் திருமதி ஜெ.சிறோமி லேனாட் ஆகியோர் கலந்துகொள்வதுடன், மதிப்பீட்டுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் ஏற்புரையை அருட்பணி விமல் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஓ-4,51,39)

## நாடகமும் அரங்கியலுக்குமான செயல் முறைக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

நாடகமும் அரங்கியலும் மாணவர்களினதும் ஆர்வலர்களிதும் செயல்முறைத் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் நாடக எழுத்துரு மற்றும் தயாரிப்புத் தொடர்பான கற்கைநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதகாலம் கொண்ட இப் பயிற்சியில் கலந்துகொண்ட முதலாவது பிரிவினர்களுக்கான கற்கைநெறி பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது பயிற்சிப் பிரிவு எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாகவும் இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் அருளகம் ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்சாலைக்கு முன்பாக) அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தில் 15ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் யாழ். செயற்திறன் அரங்க இயக்கம் தெரிவித்துள்ளது. (ஓ)

## ஊடக சுதந்திர தினம்

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஊடக சுதந்திர தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்திற்கான புதிய அலுவலகக் கட்டடம் திறப்பு, ஊடகத்துறைக்கான உயிர் கொடுத்த மூத்த மற்றும் இளம் ஊடகவியலாளர்களின் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்தல், மூத்த புகைப்படத்துறை ஊடகவியலாளர் எஸ்..கதிரவேலு கௌரவிப்பு என்பன இடம் பெறும். அத்துடன் ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊடக அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ஓ-4)

## சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இருவரையும், ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இருவரையும், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும், யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை யும், யாழ்.மதுவரித்திணைக்களத்தினர் கைது செய்து யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன், சட்டவிரோத குற்றச் செயலில் ஈடுபட்டமைக்காக தலா ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சத்து 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை கொழும்புத்துறை பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட ஐவருக்கு யாழ்.நீதிமன்றால் 4இலட்சத்து 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 6 மாத சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ஓ-6)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடாத்தப்படும் யாழ்.மாவட்டத்தின் சகல பாடசாலைகளிலும் புதிய பாடத் திட்ட பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## யாழ்.றோட்டறிக் கழகத்தினால் நிதி சேகரிப்பு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தினால், நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்காக யாழ்.மாவட்ட சமூகத்திடம் இருந்து நிதி சேகரிப்பு செயற்றிட்டம் இன்று முதல் ஒரு வார காலத்திற்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். றோட்டறியின் நெறிப்படுத்தலில் யாழ். நகர் மையம், நல்லூர், சுன்னாகம், யாழ்ப்பாண றோட்டறக்ட் கழகங்கள் இச் செயற் திட்டத்தினை முன்னெடுக்கின்றன. யாழ்.மாவட்ட மக்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்கி மக்களிற்கு சிறிய உதவியை வழங்குமாறு யாழ். றோட்டறிக் கழகம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் 5 ஆம் திகதி. காலை 10.30 மணிக்கு நடைபெறவிருந்த பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக்குழுக் கூட்டம், பிரதேச மட்ட உள சமூக அமையக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெற மாட்டாது என்றும் இக் கூட்டங்கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் அறியத் தந்துள்ளார். (ஓ)

## சான்றிதழ் வழங்கல்

(சாவகச்சேரி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் சாவகச்சேரி கிராமிய தெழிற்பயிற்சி நிலையத்தில் மரவேலைப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

2007,2008 ஆம் ஆண்டுக்கான மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் வீதி சாவகச்சேரியில் உள்ள இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் கிராமியத் தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதால் பயிற்சி பெற்றவர்களை . கலந்துகொள்ளுமாறு போதனாசிரியர் ஏச்.சேந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

## திறந்த பல்கலைக்கழக இறுதிப் பரீட்சைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2007/2008 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை இன்றும் நாளையும் மற்றும் 16 ஆம், 17 ஆம் திகதிகளிலும் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாவினைப் பூர்த்திசெய்த அனைத்து மாணவர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற இருப்பதால் மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு ஆங்கில துறைத் தலைவர் செல்வி வே.சுமங்கலா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)




## யாழ்.செய்திகள்

## ஆக்க இலக்கியத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய மரபுரிமை அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கலாசார திணைக்களம் நடத்தும் ஆக்க இலக்கியத்திறன் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளது.

ஆக்கங்கள் யாவும் "தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது" என்ற கருப்பொருளில் அமைதல் வேண்டும்.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் எழுத்தாளர்கள், பாடசாலை மாணவர்கள் தங்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (ஓ-6-30)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை (J/78) குருநாதர் சுவாமி கோவிலடி ஆனைப்பந்தியடியிலும், அத்துடன் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை (J/79) இலுப்பையடிச் சந்தி பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை யாழ். வீதி நாவலர் வீதி சந்தி புகையிரத கடவையிலும் (செந்தா ஐஸ்கிறீம்) வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-4)

# யாழ் பல்கலைக்கழகத்தில்
# வெளிவாரி மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்படவிருக்கும்
# ONLINE மூலமான வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறி

**அறிமுகம்**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் ONLINE மூலமான முதலாவது கற்கை நெறியை வியாபார முகாமைத்துவமாணி (BBM) கற்கை நெறியாகும். இது முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் நடாத்தப்படவிருக்கும் வெளிவாரி மாணவர்களுக்கான கற்கை நெறியாகும். பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும் வெளிவாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் தொலைக்கல்வி என்ற புதிய நோக்கிலான கல்வி முறையை சார்ந்ததாகும்.*

**தொலைக்கல்வி என்றால் என்ன?**

தொலைக்கல்வி (Distance education or distance learning) என்பது ஒரு வகையான வெளிவாரிக் கல்வி முறையாகும். இது மரபு ரீதியான கல்வி முறையிலிருந்து வேறுபட்டதாகவும், அவற்றின் தற்போதைய ஒழுங்கு முறைகள், விதிமுறைகளின் தாக்கத்திலிருந்து விலகி கல்வி செய்முறைக்கு புதிய அறிமுகத்தை அளிக்கின்ற ஒரு கல்விச் செயற்பாடாகும்.

வகுப்பறையினுள்ளே கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்கின்ற ஒரு முறைமையே மரபுரீதியான கல்விச் செயற்பாடு எனப்படுகின்றது. இங்கு கல்விச் செயற்பாடானது வாய்மொழி மூலமான தொடர்புகளினூடாகவும், ஆசிரியரும் மாணவரும் நேருக்கு நேர் சந்திப்பதனூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. மறுவார்த்தையில் கூறின், ஆசிரியரும் மாணவரும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தொடர்ச்சியாக சந்தித்து கல்விச் செயற்பாட்டை மேற்கொள்கின்ற ஒரு நிலைமையாகும். உதாரணமாக, இன்று எல்லா பாடசாலைகளிலும், அநேகமான பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற கல்விச் செயற்பாட்டைக் குறிப்பிடலாம்.

தொலைக்கல்விக்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை அளித்துள்ளனர். எனினும், தொலைக்கல்வி என்பது ஒரு நிறுவன ரீதியான அம்சமாகும். இது பல்வேறு வகையான கற்றல், கற்பித்தல் தந்திரோபாயங்களை உள்ளடக்குகிறது. இதனடிப்படையில் இது தபால் மூலக்கல்வி (correspondence education) மனைக்கற்கை (Home study) வெளிவாரிக்கற்கை (External study) எனவும் குறிப்பிடப்படுகிறது.

முறைசார்ந்த கல்வி போலன்றி தொலைக்கல்வி முதலில் மாணவர்களின் தேவைகள், வசதிகள் என்பவற்றையும் கவனத்தில் கொண்டதாயிருக்கும். பின்னரே நிறுவன ரீதியான அம்சங்களில் கவனம் செலுத்தும். இதனை நேரில் கல்வி எனவும் குறிப்பிடலாம். நேர் கல்வியானது நேருக்கு நேரான தொடர்பாடலைக் (face to face communication) கொண்டிருக்கிறது.

எனவே தான் தொலைக்கல்வி நேரில் கல்வி எனப்படுகிறது. தொலைக்கல்வியானது கல்வியை வழங்கக்கூடிய எல்லா தொலை தொடர்பு சாதனைகளையும் பயன்படுத்தும். எனவே இதனை திறந்த கல்வி முறை (Open education) எனவும் குறிப் பிடலாம்.

**தபால் மூலக்கல்விக்கும், திறந்த கல்விக்குமிடையேயான வேறுபாடு**

தபால் மூலம் கல்வி, தொலைக்கல்வி, திறந்த கல்வி எனும் பதங்கள் எமக்கு முரண்பாடுகளை ஏற்படுத்துவதனால் இவற்றை நாம் விளங்கிக்கொள்ளல் அவசியம். தபால் மூலக்கல்வி எனப்படுவது மரபுரீதியான கல்வி முறைபோன்று அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகளை தபால் மூலம் விநியோகிப்பதன் மூலம் அளிக்கப்படுகின்ற கல்வி முறையாகும்.

தொலைக்கல்வி எனப்படுவது மரபுரீதியற்ற புதிய முறையிலான கல்வியைக் குறிக்கின்றது. இங்கு எல்லா தொலைத் தொடர்பு சாதனங்களும் பயன்படுத்தலாம். தபால் மூலமும் இவற்றில் ஒன்றாக இருக்கலாம். தபால் மூலக்கல்விக்கும், தொலைக்கல்விக்குமிடையேயான முக்கிய வேறுபாடு யாதெனில், தொலைக்கல்வியில் தொடர்பு கொள்ளலுக்கான உயர் தந்திரோபாயங்களும், தொழில்நுட்பங்களும் பின்பற்றப்படுகின்றமையாகும்.

திறந்த கல்விமுறையானது மரபுரீதியற்ற கல்வி முறையாகும். இது மரபுரீதியான கல்விச் செயற்பாட்டு வரையறைகளிலிருந்து (பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்க ழகங்கள்) விலகுகிறது. இது தாராள கல்வி முறைமை எனப்படுகின்றது. தொலைக்கல்விக்கும், திறந்த கல்விக்கும் இடையேயான தொடர்பு யாதெனில் திறந்த கல்விக்கு தொலைக் கல்வியே மிக உதவியாக அமைகிறது. திறந்த கல்விமுறையில் அனுமதிக்கான வரையறைகள், வரவு, பரீட்சைக்காலம், பாட சேர்க்கை வகைகள், தொடர்புகொள்ளும் வழிமுறைகள் எவற்றிலும் வரையறைகள் காணப்பட மாட்டாது என்பதனால் தொலைக் கல்வியும், திறந்த கல்வியும் ஒரே கருத்தில் பயன்படுத்தப்படலாம்.

**தொலைக்கல்வியின் பிரதான அம்சங்கள்:**

- ஆசிரியரும் மாணவரும் ஒருவரிடமிருந்து இன்னொருவருவர் வேறுபடுத்தப்பட்டி ருப்பர். அதாவது ஆசிரியர் ஓரிடத்திலும், மாணவர் இன்னொரு பிரதேசத்திலோ அல்லது நாட்டிலேயோ இருப்பர். இதுவே இக் கல்வி முறைமையின் பிரதான அம்சமாகும்.
- தொலைக்கல்வி பல்வேறு உயர் தொழில்நுட்ப தொடர்பாடல் சாதனங்களை உபயோகிக்கின்றது. குறிப்பாக அச்சடித்த பாடக் குறிப்புக்களுடன் தொலைபேசி, ஓடியோ, வீடியோ நாடாக்கள், ஒலி, ஒளிபரப்புக்கள், கணனி என்பன தொலைக்கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன.

**அறிமுகப்படுத்தப்படும் வியாபார முகாமைத்துவ மாணி கற்கை நெறியானது க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த எந்த துறையைச் சார்ந்த மாணவர்களும் தமது உயர்கல்வியைத் தொடர வசதி செய்கிறது.**

- இருவழித் தொடர்பாடல் இங்கு பிரதானமானது. மாணவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளினூடாக பதிலளிக்க முடிவதாலும், ஏனைய தொடர்பு சாதனங்களினூடாக தொடர்பு கொள்ள முடிவதாலும் பின்னூட்டியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- கற்போர் தமது சக மாணவர்களிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தனித்தனியாகவே கற்க வேண்டியுள்ளது. இவர்கள் நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு மிக அரிதே. எனினும், குழுவாகச் சந்திக்கும் வாய்ப்புக்களை இவர்கள் தாமாகவே ஏற்படுத்திக் கொள்ளலாம். எனினும், மாணவர்கள் தாமாகவே தமது சுய கற்றல் மூலமே கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.
- தொலைக்கல்வி ஒரு விசேட தேவைக்கு உருவாக்கப்பட்ட ஒரு விசேடமான பதமாகும். சமூகமானது விருத்தி செய்யப்பட அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் கல்விச் செயற்பாடும் விருத்தி செய்யப்படல் வேண்டும். அவற்றினடிப்படையில் விருத்தி செய்யப்பட்ட ஒரு செயற்திட்டமே Online மூலமான தொலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும்.
- தொலைக்கல்வியானது நேருக்கு நேரான தொடர்பைக் கொண்டிராவிடினும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பாக பரீட்சை வேளைகளில் பௌதீக ரீதியான தொடர்பு ஏற்படுத்தப்படுகின்றது. எனவே இது கலப்புக் கல்வி முறையாகக் (hybrid or blended course of study) காணப்படுகின்றது.

**தொலைக்கல்வி வரலாறு :**

தொலைக்கல்வியானது இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆரம்பத்தில் தபால் மூலக் கற்கை நெறியே ஆரம்பமானது. உலகில் லண்டன் பல்கலைக்கழகமே முதன் முதலாக தொலைக்கல்வி பட்டப்படிப்பினை வழங்கிய முதல் பல்கலைக்கழகமாகும்.

இது 1958 இல் வெளிவாரிக்கற்கை நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்கியது. ஐக்கிய இராச்சியத்தில் 1969 இல் மிகப்பெரிய திறந்த பல்கலைக்கழகமான ஐக்கிய இராச்சிய திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதனது ஆரம்ப தொலைக்கல்வி விநியோக முறைகளாக வானொலியும், தொலைக்காட்சியும் உபயோகிக்கப்பட்டன.

இதன் பின்பே ஏனைய பல்கலைக்கழகங்கள் தொலைக்கல்வி தொழில் நுட்பங்களை விநியோக முறைகளாக உபயோகித் தன. 20 ஆம் நூற்றாண்டில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன யாவும் தொலைக் கல்விக்கு உபயோகிக்கப்படுகின்றன.

கணனியும், இணையமும் தொலைக் கல்வி விநியோகத்தை இலகுவாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வல்லன. தனியார் பல்கலைக்கழகமான பொனிக்ஸ் பல்கலைக் கழகம் (University of Phoenix) online பல்கலைக்கழமாகும். இது தற்போது இரண்டு இரண்டு இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது.

2010 இல் இது ஐந்து இலட்சம் ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் தொலைக்கல்வியை வழங்கி வரினும், திறந்த பல்கலைக்கழகமே முதன் முதலில் தனது தொலைக்கல்வியை மேற்கொள்ள ஆரம்பித்த நிறுவனமாகும். இன்று இலங்கையில் பல்வேறு பாடநெறிகளை தொலைக்கல்வி மூலம் சிறப்பாக வழங்கும் நிறுவனம் இலங்கை திறந்த பல்கலைக்கழகமேயாகும்.

**தொலைக்கல்வி நவீன மயமாக்கல் திட்டம்**

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 7.5 சதவீதத்திலும் குறைவாகவே உள்ளனர். இது சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் குறைவான தொகையேயாகும்.

2005 இல் க.பொ.த. உயர்தர மாணவர்களில் (117.345) 16 ஆயிரத்து 292 மாணவர்களே (14%) 15 பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர். இங்கு 1 இலட்சத்து ஆயிரத்து 143 மாணவர்கள் அல்லது 86% மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்க முடியாத நிலை காணப்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் கட்டிட வசதிகள், கல்விசார், கல்விசாரா ஊழியர் பற்றாக்குறை, ஆய்வுகூட வசதிகள், விடுதி வசதிகள், நூலக வசதிகள் போன்றவற்றிலும் பற்றாக்குறையேயாகும். இலங்கையில் உயர் கல்வி அமைச்சின் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (Distance Education Modernization Project (DEMP) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 2 ஆம் நிலைக்கல்வி நிலையை மேம்படுத்தும் முகமாக 2003 இல் உருவாக்கப்பட்டது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர மாணவர்களில் ஏறத்தாழ 1 இலட்சம் மாணவர்கள் கல்வியைப் பெறவேண்டும் என்னும் இலக்குடனேயே இது உருவாக்கப்பட்டது. இங்கு நவீன தொலைக்கல்வி நுட்பங்களை உபயோகித்து மாணவர்கள் பட்டப் படிப்புகள், டிப்ளோமா கற்கை நெறிகளை திறந்த பல்கலைக்கழகங்களினூடாகவும், மரபு ரீதியான பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் படிப்புகள் மூலமாகவும், பொதுத்துறை, தனியார் துறை பட்டப்பின் படிப்பு 2ஆம் நிலைக் கல்வி (Post Secondary) நிறுவனங்களின் ஊடாகவும் இவ்வசதிகளை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

இதன் பொருட்டு இலங்கையில் பல்வேறு நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட கற்கை நெறித்திட்டங்களிலிருந்தும் ஒன்பது நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதில் பேராதனைப் பல்கலைக்கழகம், மொறட்டுவ பல்கலைக்கழகம், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பார்மகியூற்றிக்கல் அமைப்பு, இலங்கை நூலக சம்மேளனம், தர அளவீட்டு நிறுவனம், சிலிடா போன்ற நிறுவனங்களும் வெவ்வேறு செயற்றிட்டங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன.

இவ் ஒன்பது நிறுவனங்களிலும் ஒரு நிறுவனத்தில் இருவர் வீதம் 18 பேர் DEMP திட்டத்தின் கீழ் தொலைக்கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறியை பயில்வதற்கு தெரிவு செய்யப்பட்டு இந்திரா காந்தி திறந்த பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இக்கற்கை நெறி இலங்கைக்குப் பொருத்தமான தொலைக் கல்வியின் தத்துவமும், வளர்ச்சியும் (Growth and philosphy of Distance Education) சுய கற்றல் குறிப்புக்களின் வடிவமைப்பும் அபிவிருத்தியும் (Design and Development of Self - Learning Print material), கற்றல் ஆதார சேவைகள் (Learner Support services) தொலைக்கல்வியின் முகாமை (Management of Distance Education), தொலைக்கல்விக்கான தொடர்பாடல் நுட்பம் (Communication Technology for Distance Education) போன்ற பாடநெறிகளைக் கற்க உதவியது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை விரிவுரையாளர் ஒருவர் இக்கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட விரிவுரையாளர்கள் நவீன தொலைக்கல்வி சாதன நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளில் காலத்திற்குக் காலம் கொழும்பு சென்று கலந்து கொண்டுள்ளனர். இவை கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த பயிலுனர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கடந்த வருட காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இவ் விரிவுரையாளர்களுக்கு கொழும்பில் இருந்து வந்த ஒரு குழு இப்பயிற்சிப் பட்டறையை மேற்கொண்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே வெளிவாரிப்பட்டப்படிப்பு கற்கை நெறிகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் DEMP திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் "வியாபார முகாமைத்துவமாணி" (Bachelor of Business Management) என்னும் ஓர் புதிய வெளி வாரிக் கற்கை நெறியை அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கவிருக்கின்றது. இது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றில் முதன் முதலாக ஆரம்பிக்கப்படும் ONLINE மூலமான கற்கை நெறி என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவாரிக்கற்கை நெறிகள் தனியே வணிகத்துறை மாணவர்களுக்கு வணிகமாணிப் பட்டப்படிப்புக்களையும், கலைத் துறை மாணவர்களுக்கு கலைவாரிப்பட்டப்படிப்புகளையும் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் அறிமுகப்படுத்தப்படும் வியாபார முகாமைத்துவ மாணி கற்கை நெறியானது க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த எந்த துறையைச் சார்ந்த மாணவர்களும் தமது உயர்கல்வியைத் தொடர வசதி செய்கிறது. எனவே, வணிகத்துறை, கலைத்துறை, விஞ்ஞானத்துறையைச் சார்ந்த எந்த மாணவர்களும் இக்கல்வி நெறியைத் தொடர முடியும். இது தொடர்பான விபரங்கள் அடுத்த இதழில் தொடரும்.

**ரதிராணி யோகேந்திரராஜா**
இணைப்பாளர்
(வியாபார முகாமைத்துவ மாணி கற்கை நெறி)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தெல்லிப்பளை யூனியன் கல்லூரி க.பொ.த (சா/த) 2008 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கல்விப் பணியில் சிறந்த பாரம்பரியத்தையும், நீண்ட வரலாற்றையும் கொண்டது. இது யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகப் பழைய கல்லூரிகளில் ஒன்றாகும். இக் கல்லூரியில் மிகச் சிறந்த அதிபர்கள் குறிப்பாக திருவாளர் ஐ.பி. துரைரத்தினம் போன்றோர் பணியாற்றியுள்ளனர். இன்றைய அதிபர் திரு.சு புண்ணியசீலனும் கல்வி நிர்வாகத்தில் பல புதுமைகளையும் மாற்றங்களையும் முன்வைத்து வெற்றியும் கண்டவராக திகழ்கின்றார். இக் கல்லூரி 1990களில் வலிகாமத்தில் ஏற்பட்ட இடையறாத யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இக் கல்லூரி பின்னணிப் பிரதேசங்கள் அன்று பெருமளவு மக்களைக் கொண்டிருந்தது. முடிவுறாத யுத்த நடவடிக்கைகளால் தெல்லிப்பளையில் பாதிக்கப்பட்ட இக் கல்லூரி இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரி வளவின் ஒரு பகுதியில் செயற்பட்டது. இக் கல்லூரி மீண்டும் 1995இல் ஒக்டோபரில் சாவகச்சேரிக்கு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு கடினமான சூழ்நிலையிலும் சிலமாதங்கள் சிறப்பாகச் செயற்பட்டது. 1996 ஏப்ரலில் சாவகச்சேரியிலிருந்து மீண்டும் இக் கல்லூரி இராமநாதன் கல்லூரி வளவுக்கு இடம்பெயர்ந்து தனது சேவையை தொய்வவிடாது செயற்பட்டது. கல்வியிலும் விளையாட்டிலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுவரும் இக் கல்லூரி கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளது, பெற்றும் வருகின்றது.

வலைப்பந்தாட்டத்தில் மாவட்டம், மாகாண, தேசிய மட்டங்களில் முதன்மை இடத்தைப் பெற்றிருந்ததுடன் இத் துறை விளையாட்டு வீராங்கனைகள் வெளிநாட்டுச் சுற்றுலாவையும் மேற்கொண்டமை இக் கல்லூரியின் சாதனையை பறைசாற்றுவதாக அமைகின்றது.

2002 இல் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் கீழ் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள இக் கல்லூரி தனது சொந்த இடத்துக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது. இக் கல்லூரியை சொந்த இடத்துக்குக் கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் பல இடர்பாடுகளை அதிபர் எதிர்நோக்கி நின்றபொழுதும் இவரது தூரநோக்கு,முகாமை, நிர்வாகத் திறன், ஆளுமை ஆகியவற்றாலும், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கொடுத்த ஆதரவாலும் இக் கல்லூரியை 2003 இல் இதனது சொந்த இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு கல்வி செயற்பாடுகள் பல இடையூறுகள் மத்தியிலும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இக் கல்லூரியைப் போல உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் மத்திய கல்லூரியையும் அன்று அதனது சொந்த இடத்தில் இயங்கவைக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்த்த பொழுதும் ஒரு சில முயற்சிகளுடன் செயற்பாடுகள் நின்றுவிட்டன. வயாவிளான் மத்திய கல்லூரி இன்றும் பல நெருக்கடிகள் மத்தியில் உரும்பிராயில் இயங்கி வருவது நாம் அறிந்தது. யூனியன் கல்லூரியைச் சொந்த இடத்தில் மீண்டும் இயங்கவைத்த பெருமை யூனியன் கல்லூரி சமூகத்திற்கும் குறிப்பாக அதிபர் புண்ணியசீலனுக்கும் உரித்தாகும்.

இக் கல்லூரியின் பிண்னணிப் பிரதேசத்தில் குறிப்பாக தெல்லிப்பளை, மாவிட்டபுரம், வீமன்காமம், குரும்பசிட்டி, கட்டுவன் போன்ற கிராமங்களில் இன்று மக்கள் இல்லை. இவர்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் தெற்கு பிரதேசப் பிரிவில் பல கிராமங்களில் பரவி வாழ்கின்றார்கள். இவர்கள் இடம்பெயர்ந்து வாழும் கிராமங்களுக்கு அண்மையில் பெரிய பாடசாலைகள் பல உள்ளபோதும் தங்கள் பிள்ளைகளைச் அப் பாடசாலைகளில் சேர்க்காது தாங்கள், தங்கள் மூதாதையர் கல்வி கற்ற யூனியன் கல் லூரியிலேயே தங்கள் பிள்ளைகளும் கற்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

இதனால் இவர்களின் பிள்ளைகள் தூர இடங்களிலிருந்து இக் கல்லூரிக்கு வருவதுடன் தினமும் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தமது கல்லூரிக்கு கடின பாதுகாப்பு நடைமுறைகளுக்கு உட்படுவதும், மனம்சோராது முகம்கொடுத்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவது போற்றுவதற்குரியது. கல்லூரியை நடத்துவதில் தினமும் பல போக்குவரத்துப் பிரச்சினைகளை எதிர் கொண்ட போதும் நாளாந்த கல்வி செயற்பாடுகளை முன்னெடுப்பதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் மற்றும் யூனியன் கல்லூரிச் சமூகம் கூடிய கரிசனையாகச் செயற்படுவது மிகுந்த மன நிறைவைத் தருகின்றது.

யூனியன் கல்லூரியில் இருந்து க.பொ.த சா/த 2008 பரீட்சைக்கு 84 பேர் விண்ணப்பித்து, 83 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 78 பேர் சித்தி பெற்றுள்ளனர். சித்திபெற்ற விகிதம் 94 வீதமாகும். பரீட்சை எடுத்த மாணவ/ மாணவிகளுள் 94% க.பொ.த உ/த வகுப்பில் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அட்டவணை I இல் A சித்தியடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகள்,

அட்டவணை I

| A சித்தி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 7A | 04 |
| 6A | 04 |
| 5A | 02 |
| 4A | 03 |
| 2A | 11 |
| 1A | 33 |

பரீட்சை எடுத்த 83 பேரில் 62 பேர் குறைந்தது ஒரு A சித்தியாவது பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் 10 பேர் 5 சித்திகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

அட்டவணை II

யூனியன் கல்லூரி க.பொ.த(சா/த) 2008 பரீட்சை பெறுபேறுகள்

| பாடங்கள் | பரீட்சை எடுத்தவர்கள் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி | வீதம்% |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 81 | 59 | 18 | 03 | - | - | 81 | 100% |
| உரோமன் கத்தோலிக்கம் | 01 | 01 | - | - | - | - | 01 | 100% |
| கிறிஸ்தவம் | 01 | 01 | - | - | - | - | 01 | 100% |
| தமிழ் | 83 | 18 | 25 | 28 | 12 | - | 83 | 100% |
| ஆங்கிலம் | 83 | - | 02 | 01 | 17 | 63 | 20 | 24.1% |
| விஞ்ஞானம் | 83 | 03 | 11 | 17 | 39 | 13 | 70 | 84.3% |
| கணிதம் | 83 | 21 | 07 | 18 | 33 | 04 | 79 | 95.2% |
| வரலாறு | 83 | 09 | 18 | 21 | 30 | 05 | 78 | 94% |
| பாடத் தொகுப்பு I | | | | | | | | |
| புவியியல் | 24 | - | - | 13 | 10 | 01 | 23 | 95.8% |
| வர்த்தகம் | 41 | - | 02 | 07 | 16 | 16 | 25 | 61.0% |
| குடியுரிமைக்கல்வி | 18 | 08 | 06 | 04 | - | - | 18 | 100% |
| பாடத் தொகுப்பு II | | | | | | | | |
| சித்திரம் | 08 | - | 03 | 04 | 01 | - | 08 | 100% |
| சங்கீதம் (கர்நாடகம்) | 10 | 03 | 03 | 02 | 02 | - | 10 | 100% |
| நடனம் (பரதநாட்டியம்) | 08 | 02 | 02 | 04 | - | - | 08 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 57 | 09 | 26 | 17 | 05 | - | 57 | 100% |
| பாடத் தொகுப்பு III | | | | | | | | |
| தகவல் தொழில்நுட்பம் | 13 | - | - | 04 | 08 | 01 | 12 | 92.3% |
| விவசாயம் | 43 | 06 | 05 | 20 | 07 | 05 | 38 | 88.4% |
| சுகாதாரமும் விளையாட்டு விஞ்ஞானம் | 19 | 08 | 07 | 03 | 01 | - | 18 | 100% |
| மனை விஞ்ஞானம் | 08 | - | - | 07 | 01 | - | 08 | 100% |
| | 747 | 148 | 135 | 173 | 183 | 108 | 639 | 85.54% |

சராசரியாக 5.5C யும் அதற்கு மேலும் பெற்றுள்ளார்கள். அட்டவணை II இல் பாடப் பெறு பேறுகள் காட்டப்பட்டுள்ளன. 83 மாண வர்கள் தலா 9 பாட அலகுகள் ரீதியாக 747 பாட அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர். 747 பாட அலகுகளில் 639 பாட அலகுகளில் அதாவது (85.54 விகிதம்) சித்திபெற்றுள்ளனர். 108 அலகுகளில் மாத்திரம் சித்திபெறத் தவறிவிட்டனர். சித்திபெறத் தவறிய மொத்த அலகுகளில் 63 அலகு ஆங்கிலப் பாடமாகும். இது 58.33 வீதத்தைக் குறிக்கின்றது. ஆங்கிலம் (63), விஞ்ஞானம் (13) வர்த் தகம் (16) ஆகிய மூன்று பாடங்களில் மொத்தம் சித்தி பெறாத அலகுகளின் எண்ணிக்கை 82 ஆகும். இது சித்தி பெறாத மொத்த அலகுகளில் 75.92 விகிதமாக இருக்கின்றதென்பது கவலைக்குரியது. சைவசமயம், உரோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவம், குடியுரிமைக்கல்வி,சித்திரம்,கர்நாடக சங்கீதம், பரதநடனம், நாடகமும்அரங்கியலும், சுகாதாரமும் உடற்கல்வியும், மனையியலிலும் மாணவர்கள் 100% சித்தியைப் பெற்றுள்ளனர். ஆங்கில மொழியில் சித்தி விகிதம் 24% இருப்பது குறைவு எனினும், இம் மாணவர்களின் கிராமியப் பின்புலமும் மற்றும் அவர்களின் சமூக- பொருளாதார, வாழ்க்கை முறைகளை நோக்குமிடத்து ஆங்கிலப் பெறுபேறு ஓரளவு திருப்தி தருவதாக இருக்கின்றது.ஆனால் வர்த்தகத்தில் 16 மாணவர்கள் சித்திபெறத் தவறியதற்குச் சரியான காரணங்கள் கண்டறியப்பட்டு அடுத்த வருடங்களில் இக்குறை நீக்கப்பட வேண்டும்.


அட்டவணை III இல் பாடப் பெறு


| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 148 | 19.81 |
| B | 135 | 18.07 |
| C | 173 | 23.16 |
| S | 183 | 24.50 |
| W | 108 | 14.46 |
| | 747 | 100.00 |


பேறுகள் தரம், எண்ணிக்கை, விகித அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன.

பாடப் பெறுபேறுகளின் அடைவுப் பண்பை நோக்கின் இக் கல்லூரியின் பெறுபேற்றில் பொதுவான சாதாரண ப்ரம்பல் பண்பைக் காணமுடிகின்றது. இக் கல்லூரி மீத்திறன், நடுத்திறன், சாதாரண திறன் என்ற பல்தொகுதி மாணவர்களைக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. சில யாழ்ப்பாணப் பாடசாலைகளின் பெறுபேற்றை ஆராய்ந்த பொழுது பொதுவாக மூன்று வகைப் பரீட்சை பெறுபேற்றுப் பண்புகளைக் காணமுடிகின்றன. உயர்தரச் சித்திகளைக் கூடுதலாகக் கொண்ட ஒரு பண்பு, குறைவான சித்திகளைக் கூடுதலாகக் கொண்ட பரீட்சைப் பெறுபேற்று பண்பு, சாதாரண பரம்பல் பெறுபேற்று பண்பைக் கொண்டதொரு பண்பு. இப் பண்புகளைக் காட்டும் மூன்று படங்கள் மேல் காட்டப்பட்டுள்ளன.

முதலாவது படம் மீத்திறன் மாணவர்களைக் கொண்ட பெறுபேற்றுப் பரம்பல் பண்பையும், இரண்டாவது படம் கூடுதலான திறன் குறைந்த மாணவர்களைக் கொண்ட பெறுபேற்றுப் பண்பையும், மூன்றாவது படம் கலப்பான திறன் கொண்ட மாணவர்களைக் கொண்டுள்ள பெறுபேற்று பண்பையும் காட்டி நிற்கின்றது. இவ்வகையில் படம் மூன்றில் காட்டப்பட்டுள்ள வரைபு இக் கல்லூரிப் பெறுபேற்றுக்கு உரியதாகிறது.




யூனியன் கல்லூரியின் க.பொ.த சா/த பரீட்சைப் பெறுபேறுகள் மனநிறைவைத் தருவதாக இருக்கின்றன. வரும் ஆண்டுகளில் பொதுப் பரீட்சை பெறுபேறுகள் மேலும் உயர்வடையவும், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் அடைவுகளை உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பல குறைகள், இடர்கள், கவலைகள் மத்தியிலும் யூனியன் கல்லூரியைச் சிறப்பாக வழி நடத்தி வருகின்ற அதிபர், நல்ல முறையில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள், நற்பணிகள் தொடரட்டும், மாணவர்களின் கல்வி நிலை உயரட்டும்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற யாழ்.கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -26.04.2009

## சென்.ஜோன்ஸ் கல்லூரி



410



411

## யாழ்.மத்திய கல்லூரி



451



452

# 50 தொன் உணவுப் பொருட்கள் விமான மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது

## யுனிசெப் தெரிவிப்பு

(கொழும்பு)

விமான மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 50 தொன் அவசர நிவாரணப் பொருட்கள் கொழும்பில் இறக்கப்பட்டதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. இந்தப் பொருட்கள் கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாக நீடித்த கடும் சண்டையால் இடம்பெயர்ந்த ஒரு இலட்சம் மக்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கில் துரிதமாக வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

இந்தப் பொருட்களில் போஷாக்குப் பண்டங்கள், நீர் சுத்திகரிப்புக் கருவிகள்; உடலில் இருந்து நீரிழப்பைத் தடுக்கும் உப்பு, மருந்து வகைகள் போன்றவை உள்ளடங்கும். தொடர்ந்து மேலும் பல பொருட்கள் விமான மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

இவ்வாறு யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப்பே துவாமெல்லே தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

துரித நடவடிக்கைகளை கோரி நிற்கக் கூடிய மனிதாபிமான நெருக்கடியொன்றை இலங்கை எதிர்கொள்கிறது. சுமார் இரண்டரை இலட்சம் பேருக்கு உதவி தேவையெனவும், அந்த உதவி துரிதமாக தேவை எனவும் நாம் மதிப்பிட்டுள்ளோம்.

கடந்த வாரம் யுனிசெப் ஸ்தாபனம் கடும் மோதலில் இருந்து தப்பித்தவர்களுக்காக அதிக சக்தியுள்ள 50 மெட்ரிக் தொன் பிஸ்கட்டுக்களை அனுப்பிவைத்திருந்தது. அதற்கு முன்னதாக போஷாக்கின்மையைப் போக்குவதற்காக 130 மெட்ரிக்தொன்னுக்கு மேலான போஷாக்குப் பதார்த்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தக் காலப்பகுதியில் பிள்ளைகளுக்குரிய கற்றல் உபகரணங்களை விநியோகித்ததுடன் நின்றுவிடாமல், சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய பல்லாயிரக் கணக்கான தொகுதிகளையும், பல நூற்றுக் கணக்கான நீர்த் தாங்கிகளையும், மலசல கூடங்களையும் பெற்றுக் கொடுத்ததுடன், வவுனியா பொது வைத்தியசாலையில் குழந்தை நல மற்றும் மகப்பேற்று விடுதி ஒன்றை நிர்மாணிக்கவும் உதவியது.

வடக்கின் நிலைவரம் சிறுவர்களுக்கு பேரனர்த்தத்தை விளைவிப்பதாக அமைந்துள்ளது என்பதை வலியுறுத்துவதுடன், அங்கு பெருமளவு சிறுவர் சிறுமியர் அடங்கலாக பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் சிக்கியிருப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

இரு தரப்பு துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு மத்தியில் சிக்குவது மாத்திரமின்றி, இந்த மக்கள் போதிய உணவு, குடிநீர் மற்றும் மயக்க மருந்துகள், நுண்ணுயிர்க் கொல்லிகள் போன்ற அடிப்படை மருந்துப் பொருட்கள் போதியளவில் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். நெருக்கடிப் பிரதேசத்தில் இருந்து தப்பிய மக்கள் பெரும்பாலும் களைத்தவர்களாகவும், பட்டினி மிக்கவர்களாகவும், அனேக தருணங்களில் காயமடைந்தவர்களாகவும், போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்களாகவும் சனநெரிசல் மிக்க முகாம்களை வந்தடைகிறார்கள்.

இந்த மக்களின் சுகாதார, போஷாக்கு, குடிநீர், மலசலகூட, பாதுகாப்பு, கல்வித் துறை சார்ந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் உடனடியாக அவசியப்படுகிறது என்றார். (ஓ-6)

# உதவிகளை வழங்கிவரும் சர்வதேசம் நிபந்தனைகளை விதிப்பதற்கு இடமளியோம்

## பசில் எம்.பி.உரை

(கொழும்பு)

சர்வதேச சமூகமும், அமைப்புக்களும் எமக்கு உதவுவதையிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்பதுடன், உதவிகளுக்காக சர்வதேச சமூகம் நிபந்தனைகளை விதிப்பதற்கு இடமளியோம் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், எம்.பியுமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வட மாகாணத்தின் முதலாவது மீள்குடியேற்றத் திட்டம் மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறையில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்கும், படையிருக்கும் இடையில் 200 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற மோதலின்போது, முசலி மற்றும் சிலாவத்துறை ஆகிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சவேரியார் புறத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டனர். அவர்களின் சொந்த இடங்களில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 409 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. அத்துடன் தபால் காரியாலயமும், பிரதேச செயலாளர் அலுவலகமும் திறக்கப்பட்டதுடன், மீன் பிடிப்பதற்கான படகு உள்ளிட்ட பொருட்களும் வழங்கப்பட்டன.

அங்கு நடைபெற்ற வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய பஷில் ராஜபக்ஷ எம்.பி கூறியதாவது, அரசாங்கத்தின் 2009 ஆம் ஆண்டிற்கான வரவு -செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஜப்பான் உதவியுடன் பாலங்களும், உலக வங்கியின் உதவியுடன் நீர்ப்பாசனத் திட்டங்கள், குளங்கள் புனரமைக்கப்படுகின்றன.

சர்வேதச சமூகமும் , உலக நாடுகளைச் சார்ந்த நிறுவனங்களும் எமக்கு உதவிகளைச் செய்து வருகின்றன. அதற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனினும், அதற்காக நிபந்தனைகளை விதிக்க முடியாது. எமது மக்களை எம்மால் பார்த்துக் கொள்ள முடியும். இவ்வாறான நிலையில் நிபந்தனைகளை விதித்து, மகக்களின் மூளையைக் குழப்புவதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று தெரிவித்தார். (ஓ-6)


## அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்

## மஹோற்சவம்

### 04 ஆம் நாள் பூந்தண்டிகைத் திருவிழா (02.05.2009)

**வெண்பா**

மண்மலரும் மாதங்கன் மலர்க்கண் மலர
விண்பொழியும் மும்மாரி வளமோங்கும் தன்னெழில்
தும்பிக்கைச் சோபனம் துலங்கும் விநாயகனை
நம்பினாரைச் சேருமே நலம்

**எண்சீர்**

விழுதெனத் தாங்கும் விநாயகனே
வம்சமதை காத்திடுவாய் கதிதந்தே
முழுமையே முகவர்த்தத்தின் முன்னழகே
மூதறிவின் ஞானச் சுடரொளியே
எழுஉலகத் தேந்தலே ஏரம்பமூர்த்தியே
எழுந்தருள்வாய் மூஷீகத்தில் ஏற்றம்பெறவே
வழுவாது வணங்குமுன் அடியாரவர்க்கு
வளமுயர வாழ்வுயர அருள்வாயே



-அல்வாயூர் சி.சிவநேசன்

(2566)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 8-II

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



வழி இரண்டு

களை வளரவிருக்கும் இடத்தில் அதற்கு மாற்றீடாக வளரும் எத்தாவரமும் பயனுள்ளதாகும் போது களையின் பாதிப்பு குறைவடைவதுடன் அதற்கினையாக மற்றைய தாவரத்திலிருந்து மேலதிகமான பயனை பெறமுடியும். வெறுமனே தனியாக ஒரு பயிரை வளர்ப்பதைத் தவிர்த்து பல்வேறு பயிர்களை இணைத்துக் கூட்டுப் பயிராக செய்யும் போது முதன்மைப் பயிருடன் இணைப் பயிராக வளர்க்கும் பயிர் (Companion crop) களைகளை பெருகுவதை அதனுடன் போட்டியிட்டு தவிர்க்கும் நிலை தோன்றும்.

இணைப் பயிராக வளர்க்கப்படும் பயிர்களுடன் எவ்விதத்திலும் போட்டியிட முடியாத நிலையில் களைகளின் விருத்தி மட்டுப்படுத்தப்பட்டு விடும். ஆனால் இந்த சிறப்பியல்பை ஒரு சில விவசாயிகளே நன்றாகப் புரிந்து தங்களது பயிர்ச்செய்கையைத் திட்டமிட்டு நல்ல வருவாயையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இதனை உதாரணத்துடன் விளக்குவது நன்று.

### ஊடு பயிர்ச் செய்கை (Inter cropping)

மிளகாய் பயிர்ச் செய்கையிலீடுபடும் எங்களூர் விவசாயிக்கு ஊடுபயிரின் நன்மையை இவ்விடத்தில் விளக்குவது சாலப் பொருந்தும். வெறுமனே மிளகாய்ப் பயிரினை பயிர் செய்யும் போது தோட்ட நிலத்தில் சேர்ந்து வளரும் களைகளால் பயிர்ச் செய்கையின் ஆரம்பத்தில் பிரச்சனையாகவே இருக்கும்.

தோட்ட நிலப்பரப்பில் வளரும் இருவித்திலை மற்றும் ஒரு வித்திலை களைகளினால் அவற்றின் அதீத வளர்ச்சியினால் மிளகாய்ப் பயிருக்கு தேவையான கனிமப் பொருட்கள் கிடைப்பதில் தடையேற்படுகின்றது. இக்களைகளை அகற்றுவதில் விவசாயிகள் படும் அவஸ்தையும் சொல்லில் அடங்காது.

மாறாக மிளகாய் பயிர்ச் செய்கையில் ஊடுபயிராக ஒரு வித்திலைத் தாவரத்தை குறிப்பாக சோளத்தை தெரிவு செய்யும் போது ஊடு பயிரின் மூலமாக ஒரு வித்திலை களைகளின் போட்டித் தன்மை மலினப்படுத்தப் படுத்தப்பட்டு ஒரு வித்திலைப் பயிரிலிருந்து சிறந்த விளைச்சலையும் அதிலிருந்து மேலதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஊடு பயிராக தெரிவு செய்யப்படும் பயிர் பூச்சி மற்றும் நோய்த்தாக்கம் என்பனவற்றிற்கு உட்படுவதாக இருப்பது சிறந்ததல்ல.




அதுவும் ஊடு பயிரே 'வேலியே பயிரை மேய்வதாக' அமையக்கூடாது. இங்கே சிறந்த ஊடு பயிர்த் தெரிவு முக்கியமாகின்றது.

### ஊடுபயிர்த் தெரிவில் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

**ஒரே குடும்பப் பயிர்களாக இருப்பதனை அவசியம் தவிர்த்தல் (ஒரே குடும்பமானாலும் பிரச்சனை!)**

உதாரணத்திற்காக சொலனேசியே குடும்ப பயிர்களை கவனத்திற் கொண்டால் கத்தரி, தக்காளி, மிளகாய், உருளைக்கிழங்கு போன்றவற்றில் ஒன்றை முதன்மை பயிராகவும் இன்னொன்றை ஊடுபயிராகவும் பயிர்ச் செய்கையில் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறான தெரிவு வழமையானதாக இல்லாது விட்டாலும் சந்தை கேள்வியைப் பொறுத்து சில விவசாயிகள் இவற்றை கலந்து மாறி பயிர் செய்வதுமுண்டு.

இங்கே பிரச்சினை என்னவென்றால் ஒரே குடும்பத்தாவரங்களென்பதால் தேவைப் படும் நுண்ணூட்டச் சத்தில் அடிப்படையில் ஒற்றுமை இருப்பது புலப்படும். அதேபோல் இவ்வாறான பயிர்களில் ஏற்படும் நோய்களும், அவற்றில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி மற்றும் சிற்றுண்ணிப் பீடைகளும் இக்குடும்ப பயிர்களில் எதனை பயிரிட்டாலும் இலகுவில் பல்கிப் பெருக வழிகிடைத்துவிடும்.

கிட்டத்தட்ட உணவு ஒன்றாக அதுவும் நிறைவாக கிடைக்கும் போது பீடைகளின் பெருக்கமும் அதனால் ஏற்படுத்தப்படும் சேதமும் கட்டுக்கடங்காமல் போய் விடும்.

அதாவது ஒரே குடும்ப பயிர்களை ஊடு பயிராகவோ அல்லது அதே நிலத்தில் அடுத்த பயிராகவோ தெரிவு செய்வது நல்லதல்ல என புரிகின்றதல்லவா! இந்த இடத்தில் தான் பிரச்சினை எழுகின்றது.

ஒரே குடும்ப பயிர்களை ஒரே நேரத்தில் பயிரிடுவது போல இக் குடும்பத்தைச் சேர்ந்த "களைகள்" தொழிற்பட ஆரம்பிக்கும். நாமாக விரும்பி வளர்க்காது விட்டாலும் இக் குடும்பத்தைச் சேர்ந்த களைகள், அதே வயற் பரப்பில் தானாக வளர்ந்து மேலே குறிப்பிட்ட இன்னொரு பயிர் (அதே குடும்பத்திற்குரிய) செய்யும் அழிவை செய்து விடும். இதனால் நோய், பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகும். அதனால் அவற்றினால் ஏற்படுத்தப்படும் சேதத்தை கட்டுப்படுத்த முடியாததாகிவிடும். ஆக, ஊடு பயிராக தெரிவு செய்யப்படும் பயிர் வெறுமனே விளைச்சலை நோக்கியதாக மட்டும் இருக்கக் கூடாது.

### என்ன? எப்படி?

அப்படியென்றால் ஊடுபயிராக விளைவிப்பதற்கு என்னென்ன பயிர்களை எப்படி தெரிவு செய்யலாம் என வினவுவது புரிகின்றது.

இங்கே வேறு வேறு குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களினை தெரிவு செய்தல் நல்லது. அதிலும் இருவித்திலை, ஒருவித்திலை கூட்டு மிகவும் நல்லது. இக்கூட்டமைப்பினால் முதன்மை மற்றும் ஊடுபயிராக தெரிவு செய்யப்படும் பயிர்களுக்கிடையில் போட்டித்தன்மையை தவிர்க்க முடிவதுடன் ஒன்று இன்னொன்றிற்கு உதவியாக அமைவதனை காணலாம்.

### போட்டி குறைவது ஏன்?

இருவேறு பயிர்களுக்குமான தேவை வெவ்வேறாக இருப்பது இதற்குக் காரணம். அவை உள்ளிழுக்கும் ஊட்டச் சத்துக்களின் தன்மையிலும் அளவிலும் வித்தியாசம் உண்டு. ஒன்றிற்கு அதிகளவில் தேவையாக இருப்பது மற்றையதற்கு அவசியமற்றதாக மிகச் சிறிய அளவில் தேவைப்படுவதாக அமையும்.

இதனால் இவ்வாறான பயிர்ச் செய்கை முறையில் சமநிலை ஏற்படுத்துவது இலகுவாகிவிடும். இரு வேறு பயிர்களின் வேர்த் தொகுதியும் (ஒரு வித்திலையில் நாருரி வேரும் இரு வித்திலையில் ஆணிவேர் அமைப்பையும் கவனிக்குக!) அவற்றின் அளவும் வித்தியாசப்படுவதனாலும் தேவையான நிலப்பரப்பினளவு வேறுபடுவதாலும் போட்டி குறைவடையும் என புரிகிறதல்லவா!

### பக்க பலமாக இருப்பது எப்படி?

சிறந்த ஊடுபயிர்ச் செய்கைக்கான முதன்மை மற்றும் ஊடுபயிரின் தெரிவு மிகவும் முக்கியமானதாகும். இரு வேறு பயிர்களும் தேவையில் வேறுபட்டிருப்பது முதற் காரணம். அவற்றின் உருவ இரசாயன அமைப்பு இன்னொரு காரணம்.

இதனால் ஒரு பயிரில் சேதத்தை ஏற்படுத்த வரும் பீடையை எதிர்க்கும் அல்லது தாங்கி இழுக்கும் (trapping) தன்மையை இங்கே குறிப்பிடலாம்.

மேலும் ஒரே பயிருக்கு மாறாக இருவேறு பயிர்கள் கூட்டு சேரும் போது ஒன்று இன்னொன்றிற்கு பக்க பலமாக அமையும். இந்த நிலை சிறப்பாக அமையும் போது ஊடுபயிர்ச் செய்கை சிறப்புக்குரியதாகிவிடும்.

(தொடரும்)

# சேதன விவசாயம் காலத்தின் தேவை 4

தொடர்ச்சி..

### பசுந்தாள் பசளையிடல்

மண் என்பது ஒரு பௌதீகப் பொருளா? நிச்சயமாக இல்லை. அது ஒரு வாழும் பொருள். இதனால் தான் எமது முன்னோர்கள் மண்ணை புனிதமாக மதித்தார்கள்.

உணர்வோடு சேர்த்து உயிருடன் கலந்தார்கள். விவசாயத்துக்கு அப்பாலும் மண் பல காரியங்களைச் செய்கிறது.

உதாரணமாக நீர் வட்டத்தை ஒழுங்காக்குகிறது. தாவரங்களையும் விலங்குகளையும் தாங்குகின்றது. மண்ணை உயிருள்ளது என்று சொல்ல இன்னுமொரு காரணத்தையும் கூறலாம்.

ஒரு கிராம் மண்ணை எடுத்தால் அதனுள் மில்லியன் கணக்கான உயிரினங்கள் இருக்கும். இவை பல்வேறு வகையான தொழிற்பாடுகளை மேற்கொள்பவை.

இதில் பெரும்பாலானவை விவசாயத்திற்கு நன்மை பயப்பனவே. நாங்கள் மேலும் மேலும் இரசாயனங்களை இட்டு மண்ணை கொலை செய்து கொண்டிருக்கிறோம். எனவே தான் சேதன விவசாயத்தில் வாழும் மண் (living soil) என்ற எண்ணக் கரு வளர்க்கப் படுகிறது.

நாங்கள் இடும் பசளைகள் வாழும் மண்ணை வளப்படுத்த வேண்டும். அம்முறைகளில் ஒன்றுதான் பசுந்தாள் பசளையிடல் (Green manure)

பசுந்தாள் பசளையிடல் என்பது மண் வளத்தை அதிகரிப்பதற்காக இயற்கை அளித்த கொடை. உற்சாக மூட்டக்கூடிய விடயம் என்னவெனில், ஏற்கனவே எமது விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருவதுதான்.

ஏற்கனவே இரசாயனங்கள் பாவிக்கப் பட்ட நிலத்தை சேதன முறைக்கு மாற்றுவதில் இது பிரதான பங்கு வகிக்கின்றது.

இவற்றை விடவும் இது பல நன்மைகளை கொடுக்கின்றது. அவையாவன.

- மண்வளத்தை கூட்டுதல்
- மண் கட்டமைப்பை விருத்தி செய்தல்.
- மண் புழுக்களுக்கான உணவு
- மண்ணிலுள்ள நன்மை தரும் உயிரினங்களினை அதிகரிக்கிறது.
- மலிவானது
- குறைந்தளவு கவனத்துடன் பயன் படுத்தலாம்
- கூட்டெருவை உடனடியாக தயாரிக்க முடியாத இடங்களுக்கு சிறந்த முறை.

பசுந்தாள் பசளைகளை இரு்முறைகளில் சேர்க்கலாம். ஒன்று பயிரிடல் முறை (Insitu green Manuring) மற்றையது பச்சிலை களை இடல் (Green leaf Manuring)

### பயிரிடல் முறை

இம்முறையில் பொருத்தமான தாவரங்கள் குறித்த தரையில் செய்கைக்கு முன்னதாக பயிரிடப்பட்டு பின்னர் நிலத்துக்கு சேர்க்கப்படுகிறது.

பெரும்பாலும் மண்ணுக்கு நைதரசனை பதிக்கும் ஆற்றலுள்ள தாவரங்களை தெரிவு செய்தல் நல்லது.

அவரைக் குடும்பத்தாவரங்கள் இவ்வாற்றல் மிக்கவை. இத்தாவரங்கள் வேர்களில் வேர் முடிச்சுக்கள் (root nodules) எனும் அமைப்பை கொண்டவை.

இதை சில விவசாயிகள் மணிவேர் என்றும் அழைப்பார்கள். வேர் முடிச்சுக்களில் உள்ள பக்டீரியாக்கள் வளிமண்டலத்திலுள்ள நைதரசனை நைத்திரேற்று உப்பாக தொகுத்து வழங்குகின்றன.

இத்தாவரங்கள் பயிரடப்பட்டு கிட்டத் தட்ட 50 வீதமான தாவரங்கள் பூக்கத் தொடங்கும் பொழுது வெட்டி மண்ணுடன் சேர்க்க வேண்டும். பின்னர் இவை உக்குவதற்கு 2- 2½ மாதங்கள் விட வேண்டியிருக்கும்.

அவரைத் தாவரங்கள் பயன்படுத்தப்படும் பொழுது இன்னுமொரு வகையான நன்மையும் கிடைக்கிறது.

**அட்டவணை**

| பசுந்தாள் பசளை | பிரதான பயிர் |
|---|---|
| பூவரசு | புகையிலை, திராட்சை, வாழை |
| சணல் | புகையிலை, வெங்காயம், தக்காளி |
| வேம்பு | புகையிலை, திராட்சை. |
| பாவட்டை | வெங்காயம் |
| பனையோலை | நெல், மிளகாய் |
| பயறு | நெல் |
| உழுந்து | நெல் |
| பலா | உருளைக்கிழங்கு |
| கிளிசிறிடியா | நெல் |

இத்தாவரங்களில் இருந்து பெறப்படும் விதைகள் பெறுமதி மிக்க புரத உணவுப் பொருட்களாகும். பொதுவாக அறுவடை செய்வதனால் அகற்றப்படும் நைதரசனின் அளவை விட பதிக்கப்படும் நைதரசனின் அளவு கூட்டவாகும்.

### பச்சிலைப் பசளை

இம்முறையில் வேறு இடங்களில் இருந்து பயிர்ச் செய்கை நிலத்துக்கு பசளை கொண்டு வரப்படுகிறது. எங்களது பிரதேச வேலிகளில் உள்ள பூவரசங்குழை, கிளிசிறிடியா குழை, பலாக்குழை, பனையோலை, என்பவற்றை நிலத்துக்கு தாழ்க்க வேண்டும்.

### உவர் நிலங்களை மாற்றுதல்

சில வகையான பசுந்தாள் பசளைகள் உவர் நிலத்தை நன்னிலமாக்குகின்றது. இதற்கு மிகப் பொருத்தமானது. புளியங் குழையாகும்.

எமது விவசாயிகள் சுனாமியால் பாதிக்கப் பட்ட நிலங்களை மாற்ற பயன்படுத்தி வெற்றி கண்ட முறை இது தான். புளியமிலையில் சிறிதளவு அமிலத்தன்மை உள்ளது என்பது உதிரித் தகவல்.

புளியங்குழை தவிர பாவட்டங்குழை, பூவரசங்குழை, சணல், குரக்கன், போன்றவற்றையும் இதற்காக பயன்படுத்த முடியும்.

ந. திலீபன்
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

எமது பிரதேச விவசாயிகளின் அனுபவத்தின் படி சில பயிர்கள் குறித்த வகையான பசுந்தாள் பசளைக்களை இடும் பொழுது அதிகளவான விளைச்சலைக் கொடுக்கின்றன.

(முற்றும்)

என்ன உதவி அளித்தாலும் பாம்பின் குணம் போகவே போகாது. அது தன் விஷத்தை கக்கியே தீரும். பாம்பைப் போலவே சில மனிதர்களும் இருக்கிறார்கள்.

~ ஈசாக்

வலம்புரி

# கோத்தபாயவின் பதிலுக்கு சர்வதேசத்தின் முடிபு என்ன?

இலங்கை அரசு ஒருபோதும் போர் நிறுத்தம் செய்ய மாட்டாது. அத்துடன் ஐ.நா. பணியாளர்களை அனுமதிக்கவும் போவதில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிறுத்திட்டமாக –வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி இலங்கைக்கு வருகை தந்த பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் பிரதிநிதிகளிடமே கோத்தபாய ராஜபக்ஷ இலங்கை அரசின் நிலைப்பாட்டை தெளிவு படுத்தியுள்ளார்.

இதே கருத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக, இலங்கை தனது நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாக கூறியுள்ளதென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இலங்கை அரசின் இந்த அறிவிப்பிற்கு, பின்னணியில் துணிவுடைய –பலமுடைய சக்தி இருந்தாக வேண்டும்.

ஏனெனில் சர்வதேசத்திடம் யாசிப்பதன் மூலமே தனது பொருளாதாரத்தைத் தக்க வைக்கும் பரிதாப நிலையில் இலங்கை இருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்ற சர்வதேச நாடுகளிடமும், அமைப்புகளிடமும் இருந்து கிடைக்கின்ற நிதி உதவிகளே இலங்கையின் மானத்தைக் காக்கின்றதெனலாம்.

நிலைமை இதுவாக இருக்கும் போது இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரிட்டனிடமும் பிரான்ஸிடமும் யுத்த நிறுத்தம் செய்ய முடியாது, ஐ.நா. பணியாளர்களை அனுமதிக்க முடியாதென துணிவோடு கூறுவதைச் சாதாரணமாகக் கருதி விடலாகாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த நிலைப்பாடு, தளம்பலானதல்ல. வன்னி யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து யுத்தம் நிறுத்தப்பட மாட்டாதென்றே கூறப்பட்டு வருகிறது.

ஆனால் இலங்கையின் இந்த அறிவிப்பை மூடி மறைக்கும் வகையில் இந்தியாவின் கதை அளப்புகள் இருக்கின்றன.

இலங்கைக்குச் சென்ற சிவ்சங்கர் மேனனும், நாராயணனும் யுத்த நிறுத்தம் குறித்துப் பேசியதாகவும் ஒரு சில நாட்களில் யுத்தம் நின்று விடுமெனவும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருந்தார்.

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை – தமிழக முதல்வர் கருணாநிதியைப் பொறுத்தவரை இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால் இலங்கை அரசு வெளிப்படையாகக் கூறுகிறது, யுத்தம் நிறுத்தப்பட மாட்டாதென்று. இதிலிருந்து இலங்கைக்குப் பின்னணியாக இருக்கக் கூடிய சக்தி எது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

எங்கே பார்ப்போம் சர்வதேசம் என்ன செய்யப் போகின்றதென்று?

# இடம் பெயர்ந்தவர்களுக்கு நிரந்தர குடியிருப்புக்களை நிர்மாணித்துக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்

## ஐ.நா. வலியுறுத்தல்

(கொழும்பு)

இடம்பெயர்வுகளுக்கு உள்ளான மக்களுக்கு நிரந்தர குடியிருப்புகளை நிர்மாணித்துக் கொடுக்க அரசாங்கம் முன் வர வேண்டு என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

மோதல் பிரதேசங்களில் இருந்து அன்றாடம் ஏராளமான பொது மக்கள் முகாம்களுக்கு வந்த வண்ணம் உள்ளனர். இவர் க ளுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள இடைத்தாங்கல் முகாம்களுக்கு தற்போது சனநெரிசல் மிக்கதாக இருக்கிறது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களினால் அதிக அளவில் பொதுமக்களே பாதிப்படைகின்றனர். இந்த நிலையில் பாரிய அளவில் அதிகரித்துள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை நிர்மா ணிப்பதற்கான காணி வசதிகளை அரசாங்கம் வழங்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மேரி ஒகாபே தெரிவித்துள்ளார்.

மோதல் பிரதேசத்தில் இருந்து இதுவரையில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பொதுமக்கள் வந்துள்ளனர். இந்த நிலையில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் ஒருவரும் ஓமந்தை சோதனைச் சாவடியை கடக்கவில்லை என அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரியப்படுத்தியுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புகளின் பின்னர் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் வந்துள்ளனர்.

அவர்களுக்கான உணவு தங்கும் கூடாரங்கள் உள்ளிட்ட வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை வழங்குவதில் பாரிய சாவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகளின் துணை செயலர் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சுகாதார, பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன வளர்ச்சியடைந்து வருகின்றன. வவுனியா முகாம்களை விட யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்கள் ஒப்பீட்டளவில் சிறந்ததாகக் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கம் உறுதியளித்ததன் படி, இதுவரையில் 111 முதியவர்களையே அரசாங்கம் விடுதலை செய்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பாதிப்புக்குள்ளான மக்களின் சேவைக்கு 207 வைத்தியர்கள் அனுப்பிவைப்பு

## உதவி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

வடக்கில் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக 207 வைத்தியர்களை குறித்த மக்கள் சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக உதவி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் விமல் ஜெயந்த தெரிவித்தார்.

வடக்கில் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் பொதுமக்களின் சுகாதார நிலைமைகளை கருத்திற் கொண்டே சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், உள்ளக பயிற்சிகளை முடித்துக்கொண்ட வைத்தியர்கள் 207 பேரையே இவ்வாறு பாதிப்புக்குள்ளான பொது மக்களின் நன்மை கருதி சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம்.

இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வைத்தியர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பொரளையில் உள்ள லேடி றிச்வே சிறுவர் வைத்தியசாலையில் வைத்து தமது நியமனங்களை பெற்றுக் கொண்டார்கள்.

இவ் வைத்தியர்களுக்கான சகல வசதிகளையும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது. உரிய இடங்களுக்குச் சென்று சேவைகளை மேற்கொள்வதற்காக விசேட போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வைத்தியர்களில் 44 பேரை வவுனியாவிலுள்ள சுகாதார காரியாலயங்களுக்கும் 25 பேரை வவுனியா வைத்தியசாலைக்கும் 15 பேரை மன்னார் வைத்தியசாலைக்கும் 10 பேரை செட்டிக்குளம் வைத்தியசாலைக்கும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம் என்றார். (ஓ-6)

# இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. தலையீடு செய்யக்கூடும்

## மங்கள சமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்த சூழ்நிலை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு விரைவில் தலையீடு செய்யக் கூடுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் விடுதலைப் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டாலும், ஈழக் கோரிக்கை தொடரக் கூடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டமைப்பு ஆட்சியே ஈழக் கோரிக்கையை பலப்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜகிரியவில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலத்தில் உரையாற்றும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆரம்பத்தில் சில தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து வந்ததாகவும், தற்போது பெருந்தொகையான தமிழர்கள் ஈழக் கோரிக்கையை நியாயப்படுத்தும் முனைப்புக்களில் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிப் சொல் ஹெய்ம் ஆகியோருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும், இது மதிநுட்பமான செயலாகக் கருதப்பட முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறை உத்தியோகத்தர்களையும், பௌத்த பிக்குகளையும் படுகொலை செய்த கருணா போன்றோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டமை கட்சியின் துரதிஸ்டமே என அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# பீப்பில்ஸ் எயிட் நிறுவன அதிகாரிகள் மூவரை வெளியேறுமாறு அரசு உத்தரவு

விடுதலைப்புலிகளுக்கு வாகனங்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட நோர்வேயின் பீப்பில்ஸ் எயிட் நிறுவனத்தின் மூன்று பிரதிநிதிகளையும் உடனடியாக நாட்டில் இருந்து வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கைரோஸ் பிலிப் எமினிஸ் மற்றும் பெனனி எரிக்சன் ஆகியோரையே நாட்டில் இருந்து வெளி யேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களின் வீசா அனுமதிகள் ரத்துச் செய்யப்பட்டன. இவர்களில் கைரோஸ் என்பவர் பிரித்தானியப் பிரஜையாவார்.

இவர்கள் இலங்கையில் தொடர்ந் தும் தங்கியிருக்க பல்வேறு நாட்டுத் தூதுவர்கள் மூலம் முயற்சிகளை மேற்கொண்டதாக தமக்கு தகவல் கள் கிடைத்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் பீப்பில்ஸ் எய்ட் நிறுவனத்தில் இந்த அதிகாரிகள் நேற்று முன் தினம் இலங்கையில் இருந்து வெளி யேற திட்டமிட்டிருந் தாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தொண்டு



நான் சிறுவனாயிருந்த போது செயலிற்கு வேண்டிய ஒருபெரும் பகுதி முரட்டு வைராக்கியம் என்றெண்ணினேன். ஆனால் எனக்கு வயதாக ஆக இப்போது அது உண்மையல்ல என்பதை அறிந்து கொள்கிறேன்.

எந்தச் செயலும் கேலிக்கு உரியதன்று. செய்யும் செயல்களின் இயல்பால் ஒரு மனிதனை மதிக்கக் கூடாது. செய்யும் முறையைக் கொண்டு மதிப்பீடு. இயன்ற அளவு மிகக் குறைந்த நேரத்தில் உறுதியான, அழகான ஒரு ஜோடிச் செருப்புகளை உண்டாக்கும். ஒரு செம்மான், அவனது தொழிலையும் வேலையையும் கருதும் போது, ஆயுளில் ஒவ்வொரு நாளும் பிதற்றும் ஒருபேராசிரியரை விட மேலானவனே. ஒவ்வொருசெயலும் தூயதே. செயலில் ஈடுபாடு கடவுள் வழிபாட்டின் மிக உயர்ந்த முறையாகும்.

# இலங்கையில் அகதிகள் 11 பேர் ஆந்திர மீனவர்களால் மீட்பு

(காக்கிநாடா)

இலங்கையில் இருந்து படகில் தப்பி வந்த அகதிகள் 11 பேரை ஆந்திர மீனவர்கள் மீட்டு, காக்கிநாடா கடற்கரைக்கு அழைத்து வந்தனர். இலங்கையில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் சண்டை காரணமாக, ஏராளமான அப்பாவி மக்கள் படகு மூலமாக இந்தியா தப்பி வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் தமிழக கடலோர பகுதிகளான இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பகுதிகளை வந்தடைவது வழக்கம்.

இந்நிலையில், இலங்கையில் இருந்து படகு மூலமாக தப்பி வந்த அகதிகள் 11 பேர், ஆந்திர கடலோர பகுதியில் தத்தளித்தனர். இவர்களை காக்கிநாடா பகுதி மீனவர்கள் மீட்டு கரைக்கு அழைத்து வந்தனர். இது குறித்து பொலிஸார் கூறுகையில், தப்பி வந்த 11 பேரில் ஒரு பச்சிளம் குழந்தையும் அடங்கும். கடந்த மாதம் 20 ஆம் திகதி இலங்கையில் இருந்து இவர்கள் படகில் புறப்பட்டுள்ளனர். தொடர்ந்து பசியில் வாடியதால் பலரின் நிலை மோசமாக இருந்தது.

உடனடியாக அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுடன் மேலும் 10 பேர் வந்ததாகவும் அவர்கள் கடுமையான பசி காரணமாக பாதி வழியிலேயே இறந்து விட்டதாகவும் தெரிவித்தனர்.

அவர்களது உடல்களை கடலிலேயே விட்டுவிட்டு வந்ததாகவும் கூறினர். இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றனர். (ஓ-6)

## ரஜனியின் ரசிகர் தீக்குளிக்க முற்பட்டதால் பரபரப்பு

சென்னையில் போயஸ் பூந்தோட்டத்திலுள்ள நடிகர் ரஜனிகாந் வீட்டின் முன்பு அவரது ரசிகர் ஒருவர் தீக்குளிக்க முயற்சி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகரைச் சேர்ந்த ரஜனி ரசிகர் ஒருவர், நான் ரஜனியை பார்க்க வந்துள்ளேன் எனக்கூறி, போயஸ் பூந்தோட்டத்திலுள்ள ரஜனிகாந் வீட்டிற்குள் நுழைய முயன்ற போது, காவலாளிகள் அவரை அனுமதிக்கவில்லை. இதையடுத்து ஆத்திரம் அடைந்த ரசிகர் தீக்குளிக்க முயன்றுள்ளார். இதையடுத்து தீக்குளிக்க முயன்றவரை அங்கிருந்தவர்கள் தடுத்து நிறுத்தி, பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ-6)

# இலங்கை தமிழர் மறுவாழ்விற்கு ரூ. 10 ஆயிரம் கோடி மானியம்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(மயிலாடுதுறை)

இடம் பெயர்ந்த இலங்கை தமிழர்களின் மறுவாழ்விற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மயிலாடுதுறையில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை தொகுதி அ.தி.மு.க. வேட் பாளர் ஓ.எஸ். மணியனை ஆதரித்து கீழ வீதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது,



ஆட்சி அதிகாரத்தை தனது சுயநலனுக்காக மட்டுமே கருணாநிதி பயன்படுத்துகின்றார். அவரது குடும் பத்தினர் பல்வேறு வழிகளில் சட்ட விரோ தமாக வருமானம் ஈட்டுகின்றனர். இதனால் நாட்டின் வளர்ச்சி அழிகிறது. ஜனநாயகம் செத்து மடிகிறது. குரங்கு கையில் கிடைத்த பூமலை போல தமிழக நிர்வாகம் கருணாநிதி கையில் சிக்கித் தவிக்கிறது. இந்தியாவின் பின்தங்கிய நிலைக்கும், அதிகரித் துள்ள தீவிரவாதத்துக்கும் தி.மு.க.வும் பொறுப் பேற்க வேண்டும்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வழி செய்யப்படும். தனி ஈழம் அமைக்க நடவ டிக்கை எடுக்கப்படும். இடம் பெயர்ந்த இலங்கை தமிழர்களின் மறுவாழ்விற்கு ரூ.10 ஆயிரம் கோடி மானியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஓ-6)

# அப்துல்கலாமுக்கு 2008 ஆம் ஆண்டிற்கான ஹூவர் விருது வழங்கிக் கௌரவம்



(நியூயோர்க்)

இந்திய முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அமெரிக்காவின் மிக உயரிய விருதான ஹூவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் 2008 ஆம் ஆண்டிற்கான ஹூவர் விருதைப் பெற்றுக் கொண்டார். இவ்விருது இதற்கு முன்னர் அமெரிக்க முன்னாள் அதிபர்கள் மூன்று பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது நீண்ட காலம் மக்களுக்குச் சேவை ஆற்றியவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்விருதை அமெரிக்காவின் சொசைட்டி ஆப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் என்ற அமைப்பு ஆண்டு தோறும் வழங்குகிறது.

ஆசியாவிலேயே இவ்விருதைப் பெறும் முதல் நபர் அப்துல் கலாம் ஆவார் (ஓ-6)

# பெண்கள் தங்கள் வாழ்நாளில் நான்காண்டுகள் கைத்தொலைபேசி பேசுவதில் செலவழிக்கின்றனர்

## ஆய்வில் தெரிவிப்பு

(லண்டன்)



ஒரு பெண் தன் வாழ்நாளில் கைத்தொலைபேசியில் பேசுவதற்கு மட்டும் நான்கு ஆண்டுகள் செலவழிக்கிறாள். கைத்தொலைபேசியில் பேசுவதில் ஆண்களை விட பெண்கள் தான் அதிக அளவில் நேரத்தை செலவழிக்கின்றனர் என்பது தெரிந்தது தான்.

இது தொடர்பாக லண்டன் "சன் பத்திரிகை ஒரு ஆய்வு நடத்தியது. பிரிட்டன் பெண்கள் தங்கள் வாழ்நாளில் இரண்டு இலட்சத்து 88 ஆயிரம் முறை கைத்தொலைபேசி பயன்படுத்துகின்றனர். அதாவது கைத்தொலைபேசியில் பேசுவதற்கு மட்டும் நான்காண்டுகள் செலவழிக்கின்றனர்.

பெண்களை விட ஆண்கள் கைத்தொலைபேசி பேசுவது குறைவுதான். அவர்கள் தங்கள் வாழ்நாளில் இரண்டு இலட்சத்து 77 ஆயிரம் முறை பேசுகின்றனர். அதாவது மூன்றரை ஆண்டுகள் செலவிடுகின்றனர் என்று ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் உள்ள சராசரி பெண்கள், ஆண்களை வைத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் தான் இந்த உண்மை தெரியவந்துள்ளது. கைத்தொலை பேசி பேசுவதும் வரும் அழைப்புகளுக்கு பதிலளிப்பதும் இளம் வயதினரிடையே வாடிக்கையான விடயம். கைத்தொலைபேசி மீதான மோகம் அவர்களிடம் அதிகம். வயதாக ஆக அந்த மோகம் குறைந்து வருகிறது என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 - 05 - 1920



மறைவு 12 - 05 - 2008

அமரர் **தம்பு இரட்ணலிங்கம்**

(உரிமையாளர் - பொப்பியூலர் மோட்டோர் ஸ்ரோஸ் -யாழ்ப்பாணம்)

**திதி :02.05.2009**

காலத்தைப் பொன்னாக கருதி கடமையை
கண்ணாக கருதி வாழ்ந்தீர்கள் ஐயா!
கண்ணை இமை காப்பது போல் எம்மை
காத்து வந்தீர்கள் ஐயா!
காலன் உங்களை அனுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகிறோம் ஐயா!
ஓராண்டு என்றாலென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை மறவோமையா!
எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும், பண்போடும் வாழ்ந்து
எமக்கெல்லாம் வழி காட்டிய எம் அருமை தந்தையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அம்மன் வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் ,பேரப்பிள்ளைகள்.

(2593)



# வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் நடத்திய ஊடக அறிவுப் போட்டி வினாக்களுக்கான விடைகள்

- ஈழநாடு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது யோகர் சுவாமிகள் வழங்கிய அருளுரை : ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையை எழுதுங்கள்.
- உலகில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வானொலி இலங்கை வானொலி. இதில் ஒலிபரப்பான பாடலை பாடியவர் கலையரசு சொர்ணலிங்கம்.
- இலங்கையில் பத்திரிகை ஆசிரியராகப் பதவி வகித்த முதலாவது இலங்கையர் : ஹென்றி மார்ட்டின்.
- பி.பி.சி.தமிழோசையை ஆரம்பித்தவர் திரு. சிவபாதசுந்தரம்.
- சீன வானொலியில் தமிழ் சேவை 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்தவர் மாதகல் கந்தசாமி.
- சுதேச நாட்டியம் பத்திரிகை 1902 ஆம் ஆண்டு கல்லடி வேலனால் ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிப்பதற்கு நிதியுதவி வழங்கிய நாடு ஜப்பான்.
- காமினி நவரத்தினா என்ற சிங்களப் பத்திரிகையாளர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சற்றர்டே நிவியூ பத்திரிகையை வெளியிட்டார்.
- தார்சி வித்தாச்சி என்ற பத்திரிகையாளர் அவசரகால நிலை 1958 என்ற நூலை எழுதியதற்காக நாடு கடத்தப்பட்டார்.
- உண்மை,அஞ்சாமை,நடு நிலைமை என்ற மகுட வாசகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை உதயன்.

பரிசு பெறுபவர் :

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோயிலடி,
வட்டுக் கோட்டை.

# மும்பை அணியிடம் வீழ்ந்த கொல்கத்தா அரையிறுதி வாய்ப்பை நழுவ விட்டது



(கிழக்கு இலண்டன்)

துடுப்பாட்டத்தில் டுமினியும் பந்து வீச்சில் சகீர்கானும் கை கொடுக்க மும்பை இந்தியன்ஸ் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இறுதி பந்துவரை போராடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இலக்கை அடையத் தவறியது.

இந்தியன் பிரிமியர்லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் இரண்டாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னா பிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று கிழக்கு இலண்டனில் நடைபெற்ற லீக் சுற்றின் 23 ஆவது போட்டியில் சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மக்குலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி ஆரம்பத்தில் ஜெயசூரியா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 6 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க 5.5 ஓவர்களில் 40 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் மறுமுனையில் டெண்டுல்கர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தார்.

இந்நிலையில் டெண்டுல்கர் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 34 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டுமினி அதிரடியாக துடுப்பெடுத்தாடி சரிவிலிருந்து அணியை மீட்டெடுத்தார்.

இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களை குவித்தது.

இதில் டுமினி ஆட்டம் இழக்காமல் 37 பந்துகளில் (ஒரு பவுண்டரி,4 சிக்ஸர்கள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் நேபியர் 15 ஓட்டங்களையும் நாயர்,றகானி ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா, டின்டா,முரளி கார்த்திக்,அகாக்கர், ஹயில் மற்றும் ஹோட்ஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 149 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்குஆரம்பமேஅதிர்ச்சியளித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கங்குலி பூச்சியத்துடனும் ஹயில் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 2.2 ஓவர்களில் 8 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹோட்ஜ்-வான்வைக் ஜோடி 75 பந்துகளில் 91 ஓட்டங்களை எடுத்து நம்பிக்கை அளித்தது.

இதில் வான்வைக் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 14.5 ஓவர்களில் 97 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய சுக்லா 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்து அணித்தலைவர் மக்குலம் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஹோட்ஜ் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் ஹோட்ஜ் 60 பந்துகளில் (5 பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள் அடங்கலாக) 73 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் மக்குலம் 5 ஓட்டங்களையும் சகா ஆட்டம் இழக்காமல் 8 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகீர்கான் 4 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் நேபியர்,நாயர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதில் மும்பை இந்தியன்ஸ் அணியின் டுமினி ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும்.

இதே வேளை தனது 7ஆவது போட்டியில் விளையாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5ஆவது தோல்வியை சந்தித்து அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை நழுவ விட்டது.

## கில்கிறிஸ்ட் நாயகன்

தென்னாபிரிக்காவில் நடை பெற்று வரும் ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடரில் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக் கான் சார்ஜர்ஸ் அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. தொடரில் நேற்றுவரை நடை பெற்ற 24 லீக் ஆட்டங்களிலும் அணிகள் பெற்ற புள்ளிகள் விபரம் வருமாறு;

| அணிகள் | போட்டிகள் | வெற்ற | தோல்வ் | சமநிலை | முடிபு இல்லை | புள்ளிகள் | சராசரி ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| டெக்கான் சார்ஜர்ஸ் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.923 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.318 |
| மும்பை இந்தியன்ஸ் | 6 | 3 | 2 | 0 | 1 | 7 | +1.050 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +0.104 |
| பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் | 7 | 3 | 4 | 0 | 0 | 6 | -0.329 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | +0.943 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | -1.270 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 7 | 1 | 5 | 0 | 1 | 3 | -1.388 |

## பெங்களூர் அணி வெற்றி

(டர்பன்)

வான்டேர் மேர்வின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல்சலஞ்ஜர்ஸ் அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 24ஆவது போட்டியில் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் யுவராஜ்சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுதாடிய பெங்களூர் றோயல் சலஞ் ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 145 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வான்டேர் மேர்வ் 19 பந்துகளில் (3பவுண்டரிகள்,3 சிக்ஸர்கள்அடங்கலாக) 35 ஓட்டங்களையும் ஜக்கலீஸ் 22 பந்துகளில் (4 பவுண்டரிகள்அடங்கலாக) 27 ஓட்டங்களையும் உத்தப்பா 19, பிஷ்னோய் 18, கோலி 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அப்துல்லா4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 36 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் யுவராஜ் சிங் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

வான்டேர் மேர்வ்





ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்த மகிழ்ச்சியில் யுவராஜ் சிங்

பதிலுக்கு 20 ஓவர்களில் 146 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 137 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் யுவராஜ் சிங் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள்,4சிக்ஸர்கள்அடங்கலாக) 50 ஓட்டங்களையும் கோல் 20, ஜெயவர்த்தனா 19, சங்கக்கார17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரவீன்குமார், வான்டோர் மேர்வ் மற்றும் கும்ளே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல்ஸ் சலஞ் ஜர்ஸ் அணி தான் விளையாடிய 7ஆவது போட்டியில் பெற்ற 3ஆவது வெற்றி இதுவாகும்.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 6ஆவது போட்டியில் சந்தித்த 3 ஆவது தோல்வி இதுவாகும்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 74



### தொடர் நாயகன் விருது கிடைத்த டெஸ்ட் தொடர்



கொழும்பில் நடைபெற்ற சிங்கர் உலக தொடரை தொடர்ந்து இலங்கை அணி சிம்பாவேயுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதலாவது டெஸ்ட் 1996ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை கொழும்பு ஆர்.பிரே மதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 349 ஓட்டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முதல் இனிங்ஸில் 145 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையு மிழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது. பந்து வீச்சில் முரளிதரன் 24ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 28 ஓட்டங்களைக் கொடுத்து ஒலங்கா(01),ஸ்ராங்க்(06) ஆகியோரை வெளியேற்றி 2 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

இந்நிலையில் முதலாவது இனிங்ஸில் 204 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த சிம்பாவே அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி முரளிதரனின் சுழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 127 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

பாலா

இதில் துல்லியமாக பந்து வீசிய முரளிதரன் 20.3 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 3 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து கிரான்ட் பிளவர்((27), அணித்தலைவர் காம்பில் (26), அன்ரிபிளவர் (0),ஸ்ராங்க் (8), விற்றால் (11) ஆகியோரை வெளியேற்றி 5 விக்கெட்டுக்களை பதம் பார்த்தார். இப்போட்டியில் முரளிதரன் ஒரு இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியமையானது 6 ஆவது சந்தர்ப்பமாகும் என்பதுடன் இரு இனிங்ஸிலுமாக 61 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை போட்டி யொன்றில் பெற்ற சிறந்த பெறுபேறாகும். **(பயணிக்கும்)**

## வெளிநாட்டு இராஜதந்திரிகளின்...

பேட்டியிலேயேஅவர் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

கூட்டத்தின்போது பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் பல தடவைகள் இடையூறுகளை விளைவித்தார் . அது அவருடைய போக்காக இருக்கலாம். எனக்கு அவரது நடத்தையோ அல்லது அவரது போக்கோ குறித்து ஆட்சேபனை இல்லை.

எனது விடயம் என்னவெனில், தற்போதைய நிலைமையில் எதற்காக அவர் இதில் தலையிட வேண்டும் என்பதேயாகும். இந்த நாட்டின் மக்கள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை அங்கீகரித்துள்ளனர்.

நாட்டின் தலைவர் என்ற வகையில் அவர் நாட்டு மக்கள் கூறுவதையே செவிமடுக்க வேண்டும். அதனை விடுத்து பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் கூறுவதையல்ல. இதனைத்தான் நான் அவருக்கு கூறினேன் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேற்குலக நாடுகளில் வசித்து வரும் புலம்பெயர் இலங்கை தமிழர்களை திருப்திப் படுத்தும் நோக்கில் ஐரோப்பிய தலைவர்கள் தேவையற்ற வகையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதை படையினர் நன்கு புரிந்து கொண்டுள்ளதாகவும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அரசியல் தலைவர்களையும் பொது மக்களையும் படுகொலை செய்த போது இந்த டேவிட் மிலிபான்ட் எங்கு சென்றார்? உறங்கிக் கொண்டிருந்தாரா? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

புலம்பெயர் தமிழ் மக்களை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே ஐரோப்பிய இராஜதந்திரிகள் இலங்கைக்கு விரைவதாகவும் தமிழ் மக்கள் மீதான கரிசனை எதுவும் அவர்களுக்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் பொதுமக்கள் மீது எறிகணை தாக்குதலை நடத்துவதாக பி.பி.சியை மேற்கோள் காட்டி வெளிவிவகார அமைச்சர் மிலிபான்ட் வெளியிட்ட கருத்தின் காரணமாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் மிலிபான்டுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.

பி.பி.சி உலக சேவை புலிகளுக்கு ஆதரவாக பிரசாரம் செய்து வருவதாக கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுண், வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட், அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குஷ்னர் மற்றும் ஜீ 8 நாடுகளின் அமைச்சர்கள் உள்ளிட்டோர் இலங்கை தமிழர்கள் தொடர்பில் காட்டும் கரிசனை வெறும் அரசியல் நோக்கங்களைக் கொண்டது எனவும் மக்கள் தொடர்பான உண்மையான கரிசனை எதுவும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## தெல்லிப்பழையில் நேற்று அதிகாலை குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் படுக்கையில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை 8 ஆம் கட்டை ஒழுங்கையைச் சேர்ந்த சொக்காப்புரம் வைரவர் ஆலயத்திற்கு அருகில்இச்சம்பவம்இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த புனிதன் எனத் தெரியவருகிறது.

மனைவி, குழந்தைகள் அறையில் படுத்து உறங்கியதாகவும் இவர் வெளி விறாந்தையில் படுத்து உறங்கியதாகவும் அவ்வேளையில் இந்தக் கொலை இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மல்லாகம் மாவட்ட நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டுள்ளார். (ச-5)

## இராணுவ இணையத்தளம்...

டுள்ளதுடன் மக்களின் இழப்புக்கள் குறித்த படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் இலங்கை இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று முடக்கப்பட்டுள்ளமை, தமிழீழ விடுதலைப் புலிகள் இணையத்தள பயங்கரவாதத்தை மேற்கொண்டுள்ளமையை எடுத்துக் காட்டுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அது இராணுவத்தினரின் மனிதாபிமான நடவடிக்கைகளை வெளியுலகிற்கு மறைக்கும் பொருட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை என அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரில் விடுதலைப் புலிகளின் பின்னடைவுத் தகவல்களை இராணுவ இணையத்தளம் உரிய முறையில் உண்மையாக வெளியிட்டு வந்துள்ளது. இந்நிலையில், விடுதலைப் புலிகளின் மென்பொருள் நிபுணர்கள் இராணுவ இணையத்தளத்தினை திட்டமிட்டு சேதப்படுத்தியுள்ளனர்.

எனவே, புலிகளுக்காக பிரசாரத்தில் ஈடுபடுவோர் இனியேனும் அவர்களைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, அந்த இணையத்தளம் சீர் செய்யப்பட்டு நேற்றுப் பிற்பகல் முதல் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்தது. எனினும், சற்று நேரத்தில் மீண்டும் அந்த இணையத்தளம் செயலிழந்தது.

இலங்கை இராணுவத்தின் இந்தப் புகார் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களினால் முடக்கப்பட்டுள்ள இராணுவ இணையத்தளம் மீண்டும் விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.(ச-5,14)

## வன்னித் தாக்குதல்...

இணைந்து கடும் எதிர்த்தாக்குதல்களை நடத்தினர்.

இதில் டோறா பீரங்கிப் படகும், நீருந்து விசைப்படகும் விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டு கடல் வழி தரையிறக்க முயற்சியும் முறியடிக்கப்பட்டதுடன், தரைவழியாக முன்நகர முற்பட்ட படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 352 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 722 பேர் காயமடைந்துள்ளனர் என புலிகள் தரப்பு இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தத் தரையிறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

செறிவான தாக்குதலை நடத்தியவாறு மேற்கொள்ளப்பட்ட இந்த தரையிறக்க முயற்சிக்கு எதிராக கடற்புலிகளும் விடுதலைப் புலிகளும் இணைந்து கடும் எதிர்த்தாக்குதல்களை நடத்தினர்.

இதில் டோறா பீரங்கிப் படகும் நீருந்து விசைப்படகும் விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் படையினரின் தரையிறக்க முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## முல்லைத்தீவு...

தரையிறங்க முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தியதாகவும் அதன்போது கடற்படையினரின் இரண்டு படகுகள் அழிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி சில இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-14)

## செய்ம்மதிப்...

புலிகளுக்குமிடையில் நடக்கும் மோதல்கள் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் சிறிய கடற்கரைப் பிரதேசத்தில் அடைபட்டிருப்பதை,ஐ.நா. மன்றத்தால் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படங்கள் காட்டுகின்றன.

இந்த எறிகணை மற்றும் குண்டு வெடிப்புகளுக்கு இராணுவம் பொறுப்பல்ல என்று இலங்கை அரசு தெரிவிக்கின்றது. இது குறித்து விடுதலைப் புலிகள் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி சுடவேண்டாம் என்று ஐ.நா. மன்றம் இலங்கை அரசை தொடர்ந்து கேட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யசூசி அகாஷி...

கலந்துரையாடி அவர்களது குறைநிறைகளையும் கேட்டறிந்துள்ளார்.

இவருடன் மனிக்பாம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், யசூசி அகாஷியின் வவுனியா விஜயம் குறித்து தெரிவிக்கையில்,

சில மணித்தியாலங்கள் வவுனியா பிரதேசத்திலுள்ள முகாம்களிற்கு விஜயம் செய்து பார்வையிட்டார். அங்கு நாம் மேற் கொண்டுள்ள வசதிகள், ஏற்பாடுகள் குறித்தும் பார்வையிட்டு திருப்தி அடைந்தார். அத்தோடு இடம் பெயர்ந்தவர்களிற்கு தமது நாடு உதவி செய்யும் என்ற உத்தரவாதத்தையும் அங்கு யசூசி அகாஷி தெரிவித்தார் என அவர் கூறினார். (ச-14)

## மோதல்...

முகம் கொடுத்துள்ளதுடன் நீங்கள் மனிதக் கேடயங்களாகவும் வைக்கப்பட்டுள்ளீர்கள். எனவே உங்கள் பாதுகாப்புக்காக அங்கிருந்து வெளியேறி வாருங்கள் என ஜனாதிபதி விடுத்த வேண்டுகோள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் வான் மார்க்கமாக வீசப்பட்டுள்ளன.

வெளியேறும் மக்களின் பாதுகாப்பை தான் உறுதிப்படுத்துவதாகவும் ஜனாதிபதி உறுதிமொழி வழங்கியுள்ளார்.

பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தக்கூடாது என ஜனாதிபதி இராணுவத்தினருக்கு அறிவித்திருந்த நிலையில் பொது மக்களை வெளியேறுமாறு தற்பொழுது கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## ஐ.நா. பாதுகாப்பு...

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சூசன் ரைஸ் உரையாற்றியுள்ளார்.

அப்பாவி மக்கள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்துவது மற்றும் விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்துவது ஆகிய இரண்டுமே முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே நடைபெற்று வரும் சண்டையில் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகி வருவதற்கு ஆழ்ந்த கவலை தெரி வித்துள்ளார்.

போர்ப் பகுதிக்கு செல்ல ஐ.நா மனித நேய குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இதன் மூலம் அப்பாவி மக்களை போர் பகுதியிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றி அவர்களுக்கு தேவையான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.(ச-5)

**Spoken English** City & Guilds
**& INTERNATIONAL ESOL**

இந்தப் பரீட்சைகளில் சித்தியடைந்தால் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற City & Guilds இன் Diploma in English (UK) என்ற பட்டத்தைப் பெறமுடியும்.

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற; சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச; இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத; எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாக படிக்க ஏற்ற ஓர் பாடநெறி

The Diploma is suitable for anybody. The qualification covers all four language skills and so is recognized as a good assessment of a learner's overall language ability by universities and the UK Borders Agency (UKBA). The UKBA accepts the International ESOL Diploma as proof of language ability for migrants wishing to work and/or live in the UK.

புதிய வகுப்புக்கள் 04.05.2009 இல் ஆரம்பமாகின்றன.

**BRITISH COLLEGE OF ENGLISH**
City & Guilds Implementation Partner
143,Adiyapatham Road, Thirunelvely.
T.P: 060 - 221 - 6027 - 0778803887

## தவறிவிட்டது

சிறப்பாவளை கரணவாய் வடக்கு,கரவெட் டியைச் சேர்ந்த தங்கவேல் ரமேஸ் என்பவரது NO-HR 1242 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் வாகன அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ் என்பன யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கும் ஆவரங்கால் பருத்தித்துறை பிரதான வீதிக்குமிடையே நேற்றைய தினம் (01.05.2009) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ ஒப்படைக்கவும்.

தொடர்புக்கு: 0779184423 (2595)

எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை
April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்

"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை,பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E.Mail: moorthydigital@gmail.com

## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி அமிர்தலிங்கம்

*(முன்னாள் தபால் ஊழியர் கொக்குவில்)*
*(முன்னாள் பகுதி நேர ஆங்கில ஆசிரியர், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)*

கொக்குவிலை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி அமிர்தலிங்கம் 01.05.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும் அமுதினி, அனுசினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமாரின்(பிரான்ஸ்) அன்பு மாமனாரும் கஜீபனின் (பிரான்ஸ்) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02.05.2009 சனிக்கிழமை (இன்று) 2 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக (டிப்போ அருகாமை ) கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-2439)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.